ISBN : 978-81-685205-2-3

செந்தமிழறிஞர்கள்:108



கி வ ஜகந்நாதன்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

ttps://www.annacentenarylibrary.org/pages/view/90.%20%E0%AE%95%E0%
%BF.%E0%AE%B5%E0%AE%BE.%E0%AE%9C%E0%AE%95%E0%AE%A8%E0
AF%8D%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D%
0(1906-1988)

செந்தமிழ்சிற்பிகள்

கி.வா.ஜகந்நாதன் (1906-1988)



அறிமுகம்

கிருஷ்ணராயபுரம் வாசுதேவ ஜகந்நாதன் (ஏப்ரல் 11, 1906 - நவம்பர் 4, 1988) குறிப்பிடத்தக்க தமிழ் இதழாளர், கவிஞர், எழுத்தாளர் மற்றும் நாட்டுப்புறவியலாளர். இவர் தமிழறிஞர் உ.வே சாமிநாதய்யரின் மாணாக்கராவார். கலைமகள் இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். 1967-இல் இவரது வீரர் உலகம் என்னும் இலக்கிய விமர்சன படைப்பிற்கு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது. கம்பன் கழகம் இவரது நினைவாக கி. வா. ஜ பரிசை நிறுவி வழங்கி வருகிறது.

1933-இல் இவர் வித்துவான் பட்டம் பெற்றார் 1949-இல் திருமுருகாற்றுப்படை அரசு, 1951-இல் வாகீச கலாநிதி, 1982-இல் இராஜ சர் அண்ணாமலை செட்டியார் நினைவுப்பரிசு ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

எழுதிய நூல்கள்

அதிகமான் நெடுமான் அஞ்சி
அதிசயப் பெண்

அப்பர் தேவார அமுது
அபிராமி அந்தாதி
அபிராமி அந்தாதி விளக்கம்
அமுத இலக்கியக் கதைகள்
அழியா அழகு
அறப்போர் - சங்கநூற் காட்சிகள்
அறுந்த தந்தி
அன்பின் உருவம்

தமிழ் பழமொழிகளையும், நாடோடிப் பாடல்களையும் சேகரித்துக் கொடுத்து ஒரு பல்கலைக்கழகம் செய்யும் பணியை தனியொருவராகச் செய்து தமிழ் தொண்டு புரிந்தவர்.

(😊)(😊) @@@@@@ (😊)(😊)

கி. வா. ஜகந்நாதன் (1906–1988) ஒரு சிறந்த தமிழ் அறிஞர், இதழாளர், மற்றும் நாட்டுப்புறவியலாளர். உ.வே.சா.வின் மாணவரான இவர், கலைமகள் இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். அவரது படைப்புகள், குறிப்பாக 'வீரர் உலகம்' (1967 சாகித்திய அகாதமி விருது), தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்கவை. இவரின் நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

கி.வா.ஜ - முக்கிய அரசு மற்றும் பொதுக் குறிப்புகள்:

- **பிறப்பு:** ஏப்ரல் 11, 1906, கரூர் மாவட்டம்.
- **சிறப்புகள்:** 'வாகீச கலாநிதி', 'திருமுருகாற்றுப்படை அரசு' (1949), சாகித்திய அகாதமி விருது பெற்றவர் (1967).
- **முக்கிய படைப்புகள்:** வீரர் உலகம், கற்பக மலர், வாழ்ந்த தமிழ், சங்க நூல் காட்சிகள் (Pidiyum Kalirum), கலைமகள் கதைகள்

கல்வி/பரிசு: 1933-இல் வித்துவான் பட்டம், 1982-இல் ராஜ சர் அண்ணாமலை செட்டியார் நினைவுப்பரிசு.

கல்வி/தேர்வுப் பொருட்கள்:

- விக்கிமூலம் (Wikisource) மற்றும் கலைமகள் இதழ் காப்பகங்களில் இவரது படைப்புகள் கிடைக்கின்றன.
- TNPSC மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான மாதிரி வினாக்கள், இவரது படைப்புகள் மற்றும் இலக்கியப் பங்களிப்பை அடிப்படையாகக் கொண்டு "தமிழ் விக்கி" மற்றும் "கலைமகள்" போன்ற தளங்களில் உள்ளன.

(😊)(😊) $$$$$$$$$$$$$$$ (😊)(😊)

2007ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் நாளில் இவரது படைப்புகளை நாட்டுடைமை நூற்பட்டியலில் இணைத்தற்கான தமிழ்நாடு அரசு அறிவித்த ஆணை

https://ta.wikisource.org/wiki/%E0%AE%86%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D:%E0%AE%95%E0%AE%BF._%E0%AE%B5%E0%AE%BE._%E0%AE%9C%E0%AE%95%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D/%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B2%E0%AF%8D

தமிழ்நாடு அரசு
சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 14 தமிழ் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும், நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தி(தவ1–2) துறை

அரசாணை (நிலை) எண்.79

நாள்:2.03.2007.
திருவள்ளுவராண்டு–2038
விய – மாசி 18
படிக்க

1. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ந.க.எண். 4024/தமிழ்–1, 2005, நாள்.27.07.2005.
2. அரசாணை(நிலை) எண்.261, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1–2) துறை, நாள் 14.11.2005.
3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ந.க.எண். 2867/தமிழ்–1, 2006, நாள்.13.02.2007.

*****

ஆணை

தமிழுக்கு பெருந்தொண்டாற்றிச் சிறப்பு மிக்க நூல்களைப் படைத்துள்ள தமிழ்ச் சான்றோர்களின் நினைவைப் போற்றும் வகையிலும் அவர்களின் படைப்புகள் பெருமளவில் மக்களைச் சென்றடையும் நோக்கிலும் மேலே மூன்றில் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்ட செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்து ஏற்று, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் திருவாளர்கள்

1. மாயூரம் வேதநாயகம் பிள்ளை ,
2. சக்தி வை. கோவிந்தன்,
3. தெ.பொ மீனாட்சி சுந்தரனார் மற்றும்
4. த.நா.குமாரசாமி

ஆகிய தமிழறிஞர்களின் இலக்கிய படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகையாக அவர்களது மரபுரிமையர்களுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.20.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது. இந்த பரிவு தொகையினை அரசு மீள ஆய்வு செய்து மேற்படி நான்கு தமிழறிஞர்களின் இலக்கிய படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கியதால் பரிவுத் தொகையாக ஏற்கனவே அவர்களது மரபுரிமையாளர்களுக்கு ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்ட தலா ரூ.5,00,000/–க்கு பதிலாக தலா ரூ.6,00,000/– வீதம் மொத்தம் ரூ.24,00,000/– இலட்சம் (ரூபாய் இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து வழங்க ஆணையிடப்படுகிறது.

2. மேலும் தமிழுக்கு பெரும் தொண்டாற்றிய திருவாளர்கள் கா. சு. பிள்ளை புலவர் குலாம் காதிறு நாவலர் , திவைசதாசிவப் பண்டாரத்தார், டாக்டர் சி.இலக்குவனார், மகாவித்வான் தண்டபாணி தேசிகர், கி.ஆ.ரங்கநாதன், (கி.ஆ.ர) நாரணதுரைக்கண்ணன், டாக்டர் மா.இ. ராசமாணிக்கனார், டாக்டர் வ.சுப.மாணிக்கம், புலவர் கா.கோவிந்தன் ஆகிய 10 தமிழ் சான்றோர்களின் நூல்கள் எழுத்துப்படிகள் அச்சில் உள்ள நூல்கள் மற்றும் அவர்கள் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகையாக ஒவ்வொருவரின் குடும்பத்தாருக்கும் தலா ரூ.6,00,000/– வீதம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) 10 பேருக்கு மொத்தம் ரூ.60,00,000/– (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 1 – மற்றும் 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.84,00,000/– (ரூபாய் எண்பத்து நான்கு இலட்சம் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202–பொதுக் கல்வி–05. மொழி வளர்ச்சி–800 ஏனைய செலவு – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள் பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09 உதவி மானியங்கள் – 03 குறிப்பிட்டத் திட்டங்களுக்கான மானியங்கள்"
(த.தொ.கு. 2202 05 800 JE 0933)

4. பரிவுத் தொகையை பெறவரும் மரபுரிமையாளர்கள்/குடும்பத்தினருக்கு சிறப்பு செய்யும் பொருட்டு பொன்னாடை, காசோலை, பேழை, போக்குவரத்து பயணச் செலவு ,மதிய உணவு ,சிற்றுண்டி மற்றும் இதர சில்லறைச் செலவினங்களுக்காக, ஒவ்வொரு நூலாசிரியருக்கும் ரூ.5,000 /– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் 14 பேருக்கு ரூ.70,000/– (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி நான்கில் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202–பொதுக் கல்வி–05. மொழி வளர்ச்சி–800 ஏனைய செலவு – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05 அலுவலகச் செலவுகள் – 02 ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு. 2202 05 800 JE 0522)

6. மேலே பத்தி 1, 2, (ம) 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதியொதுக்கம் 2006–2007–ஆம் ஆண்டுக்கான இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். அத்தகைய நிதி கிடைக்கும் வகையில் அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்படி தொகைக்கான பட்டியல்களை உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது , அவை

ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை 600 001 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினங்கள் 2006-2007 இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும்.

7. மேலே பத்தி 1 மற்றும் 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதி ஒதுக்கீட்டை 2006-2007 -ஆம் ஆண்டின் இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்தில் சேர்க்கத் தேவையான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 1,2,(ம) 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு 1-இன் பிரிவுக் கூறு 99-இன் கீழ் முன்பணமாக பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச் சீட்டுகளின் அடிப்படையில் முன்பணத் தொகைக்கான பட்டியலை சரிக்கட்டவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

9. வருவாய் துறையினரின் மரபுரிமையர் சான்றின்படி உரிய மரபுரியர்களுக்குத் தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.12628/கல்வி - II/2007, நாள். 1.03.2007 -இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1684-உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து.இராசேந்திரன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8.
14 நூலாசிரியர்களின் குடும்பத்தினர்கள் (தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர், (வடக்கு) சென்னை -1
மாநிலகணக்காய்வு தலைவர், சென்னை - 18/35.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
நிதி (கல்விII / வ.செ.பொ II)துறை, சென்னை-9.
இ.கோ/உ.திரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3.3.2007
(ச.வின்சென்ட் தினகர் ஞானஒளிவு)
அரசு சார்புச் செயலாளர்

3.3.07

தமிழ்: சில ஆண்டுகளுக்கு ஒருமுறை தமிழ்நாடு அரசு சிறந்த நூல ஆசிரியர்களின் படைப்புரிமையை வாங்கி மக்களுக்கு பொதுவுரிமையில் அளிக்கும். 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு வெளியிட்ட, இந்த ஆவணப்படி, கீழ்கண்ட ஆசிரியர் படைப்புகள், நாட்டுடைமை நூல்களாக ஆகின்றன.

- 2007 ஆம் ஆண்டு இரண்டு அரசாணைகள் வெளியிடப்பட்டன. முதல் ஆணையில் 14 படைப்பாளிகளுக்கும், இரண்டாவது ஆணையில் 20 ஆசிரியர்களுக்கும் பரிவுத்தொகை வழங்கப்பட்டு, அவர்களின் படைப்புகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. அவர்களின் விவரம் வருமாறு;-
- முதல் அரசாணைப்படி, கீழ்கண்ட 14 நூலாசிரியர் அடங்குவர்.

1. மாயூரம் வேதநாயகம் பிள்ளை
2. சக்தி வை. கோவிந்தன்
3. தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை
4. த. நா. குமாரசாமி
5. கா. சு. பிள்ளை
6. புலவர் குலாம் காதிறு நாவலர்
7. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார்
8. டாக்டர் சி. இலக்குவனார்
9. மகாவித்வான் தண்டபாணி தேசிகர்
10. கி.ஜ.ரங்கநாதன்
11. நாரணதுரைக்கண்ணன்
12. டாக்டர் மா. இ. ராசமாணிக்கனார்
13. டாக்டர் வ. சு. மாணிக்கம்
14. புலவர் கா. கோவிந்தன்

- இரண்டாம் அரசாணைப்படி, கீழ்கண்ட 20 நூலாசிரியர் அடங்குவர்.

1. ம. சிங்காரவேலர்
2. தவத்திரு குன்றக்குடி அடிகளார்
3. கி. ஆ. பெ. விசுவநாதம்
4. **கி. வா. ஜகந்நாதன்**
5. அ. ச. ஞானசம்பந்தன்
6. திருக்குறளார் வீ. முனுசாமி
7. உவமைக் கவிஞர் சுரதா
8. சாவி
9. மாவெண்கோ (எ) வ. கோ. சண்முகம்
10. தீபம் நா. பார்த்தசாரதி
11. எஸ். எஸ். தென்னரசு
12. கவிஞர் வாணிதாசன்
13. கவிஞர் கருணானந்தம்
14. அவ்வை துரைசாமி பிள்ளை

15. சல்லிகண்டபுரம் பி. கலைமணி
16. டி. கே. சீனிவாசன்
17. சி. பி. சிற்றரசு
18. ஏ. வி. பி. ஆசைத்தம்பி
19. இராம. அரங்கண்ணல்
20. மருதகாசி

(😊)(😊) @@@@@@ (😊)(😊)

இந்து தமிழ் திசை

https://www.hindutamil.in/news/blogs/178936-10.html

கி.வா.ஜகன்னாதன்

{ராஜலட்சுமி சிவலிங்கம்}

தமிழ் அறிஞர், எழுத்தாளர்

தலைசிறந்த தமிழ் எழுத்தாளர், சொற்பொழிவாளர், சிலேடைப் பேச்சில் வல்லவரான கி.வா.ஜகன்னாதன் (Ki.Va.Jagannanthan) பிறந்த தினம் இன்று (ஏப்ரல் 11). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

* கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரத்தில் (1906) பிறந்தார். சிறிது காலத்தில் குடும்பம் சேலம் அடுத்த மோகனூருக்கு குடியேறியது. அங்கிருந்த திண்ணைப் பள்ளியில் ஆரம்பக் கல்வி கற்றார். வாங்கல், குளித்தலை பள்ளிகளில் கல்வியைத் தொடர்ந்தார்.

* கணிதமும், இயற்பியலும் இவருக்குப் பிடித்த பாடங்கள். இளம் வயதிலேயே திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர்அலங்காரம், கந்தர்அனுபூதி உள்ளிட்டவற்றை மனப்பாடமாகக் கூறுவார். எழுதுவதிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். சிதம்பரம் நடராஜர் மீது 'போற்றிப் பத்து' என்ற பதிகத்தை 14-ம் வயதில் எழுதினார். முருகன் மீதும் பல பாடல்கள் எழுதினார்.

* பள்ளி இறுதி வகுப்பு படிக்கும்போது முடக்குவாதம் ஏற்பட்டதால் படிப்பு தடைபட்டது. இதனால் இலக்கியத்தின் மீது முழு கவனம் செலுத்தினார். 'ஜோதி' என்ற புனைப்பெயரில் இவர் எழுதிய கவிதை கள் பிரபல இதழ்களில் வெளியாகின. காந்திஜியால் கவரப்பட்டவர், ராட்டையில் நூல் நூற்று கதர் ஆடை களை அணிந்தார்.

* காந்தமலை முருகன் கோயில் திருவிழாவில் இவர் ஆற்றிய முதல் சொற்பொழிவு, அனைவரையும் கவர்ந்தது. சேந்தமங்கலம் சுயம்பிரகாச சுவாமிகள் இவரை அந்த ஊரிலேயே தங்கிப் பணியாற்றும்படி கூறினார். பஞ்சாயத்து அலுவலகத்தில் கணக்கராகப் பணியாற்றியபடியே, சொற்பொழிவுகளும் நிகழ்த்தினார். ஆசிரமப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தார்.

* சுவாமிகளின் ஆலோசனைப்படி, சென்னையில் உ.வே.சா.வுடன் தங்கி, குருகுல முறையில் தமிழ் பயின்றார். அவரது தமிழ்ப் பணிக்கு உதவுவதையே தன் வாழ்நாள் லட்சியமாக ஏற்றார். அவரது அன்புக்குப் பாத்திரமாகி, அவரது உதவியாளராகவும் செயல்பட்டார்.

* இலக்கண, இலக்கிய, சங்ககால நூல்கள், காப்பியங்கள், பிரபந்தங்கள், சிற்றிலக்கியங்கள் என அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார். 'வித்வான்' தேர்வு எழுதி மாநிலத்திலேயே முதல் மாணவராகத் தேறி திருப்பனந்தாள் மடத்தின் ஆயிரம் ரூபாய் பரிசைப் பெற்றார். 1932-ல் கலைமகள் இலக்கிய இதழில் பணியாற்றும் வாய்ப்பு பெற்றார். தன் எழுத்தாற்றல், உழைப்பால் அதன் ஆசிரியராக உயர்ந்தார். இளம் படைப்பாளிகளை ஊக்கப்படுத்தினார்.

* பேச்சாற்றல், சிலேடைப் பேச்சால் அனைவரையும் வசீகரித்தார். இவை பல நூல்களாகவும் வெளிவந்தன. நாடோடிப் பாடல்கள் மீது மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார். பல கிராமங்களுக்கும் சென்று மக்களைச் சந்தித்து அவர்களைப் பாடச் சொல்லிக் கேட்டு, குறிப்பெடுத்தார். அவற்றைத் தொகுத்து, நூலாக வெளியிட்டார்.

* ஏற்றப் பாடல்கள், திருமணப் பாடல்கள், தமிழ்ப் பழமொழிகள், நாட்டுப்புறவியல் குறித்து ஆராய்ந்து எழுதிய மலையருவி உள்ளிட்ட இவரது நூல்கள் குறிப்பிடத்தக்கவை. 150-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழமொழிகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டார்.

* சிறுகதைகளும் எழுதினார். திருக்குறள், திருவெம்பாவை, திருப்புகழ், பெரியபுராணம் நூல்களுக்கு விளக்கவுரை எழுதினார். ஏராளமான பரிசுகள், விருதுகளைப் பெற்றார். இவரது 'வீரர் உலகம்' என்ற இலக்கிய விமர்சன நூலுக்கு சாகித்ய அகாடமி விருது கிடைத்தது.

* வாகீச கலாநிதி, செந்தமிழ்செல்வர், தமிழ்ப் பெரும்புலவர், திருநெறித் தவமணி, சொல்லின் செல்வர் உள்ளிட்ட ஏராளமான பட்டங்கள் பெற்றார். திறனாய்வாளர், உரையாசிரியர், கவிஞர், பதிப்பாளர், கட்டுரையாளர், சொற்பொழிவாளர், கதாசிரியர் என்ற பன்முகப் பரிமாணம் கொண்ட கி.வா.ஜ. 82-வது வயதில் (1988) மறைந்தார்.

(😊) @@@@@@@@@@@@@@@@@@ (😊)

கி.வா.ஜகந்நாதன்
அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

https://www.tamilvu.org/library/nationalized/html/naauthor-92.htm

01.	அதிகமான் நெடுமான் அஞ்சி
02.	அதிசயப் பெண்
03.	அப்பர் தேவார அமுது
04.	அபிராமி அந்தாதி
05.	அபிராமி அந்தாதி விளக்கம்
06.	அமுத இலக்கியக் கதைகள்
07.	அழியா அழகு
08.	அறப்போர் -சங்கநூற் காட்சிகள்
09.	அறுந்த தந்தி
10.	அன்பின் உருவம்
11.	அன்பு மாலை
12.	ஆத்ம ஜோதி
13.	ஆரம்ப அரசியல் நூல்
14	ஆலைக்கரும்பு
15.	இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி
16.	இருவிலங்கு
17.	இலங்கைக் காட்சிகள்

43.	கற்பக மலர்
44.	கன்னித் தமிழ்
45.	காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி
46.	காவியமும் ஓவியமும்
47.	கி.வா.ஜ பேசுகிறார்
48.	கி.வா.ஜ வின் சிலேடைகள்
49.	கிழவியின் தந்திரம்
50.	குமண வள்ளல்
51.	குமரியின் மூக்குத்தி
52.	குழந்தை உலகம்
53.	குறிஞ்சித் தேன்
54.	கோயில் மணி
55.	கோவூர் கிழார்
56.	சகல கலாவல்லி
57.	சங்கர ராசேந்திர சோழன் உலா
58.	சரணம் சரணம்
59.	சித்தி வேழம்
60.	சிரிக்க வைக்கிறார்
61.	சிலம்பு பிறந்த கதை
62.	சிற்றம்பலம்
63.	சுதந்திரமா!
64.	ஞான மாலை
65.	தமிழ் நாவல்கள் - நாவல் விழாக் கருத்துரைகள்
66.	தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்
67.	தமிழ் நூல் அறிமுகம்

68.	தமிழ் வையை - சங்கநூற் காட்சிகள்
69.	தமிழ்க் காப்பியங்கள்
70.	தமிழ்த் தாத்தா(உ.வே.சாமிநாத ஐயர்)
71.	தமிழ்ப் பழமொழிகள் - தொகுதி 1
72.	தமிழ்ப் பழமொழிகள் - தொகுதி 2
73.	தமிழ்ப் பழமொழிகள் - தொகுதி 3
74.	தமிழ்ப் பழமொழிகள் - தொகுதி 4
75.	தமிழ்ப்பா மஞ்சரி
76.	தமிழின் வெற்றி
77.	தனி வீடு
78.	தாமரைப் பொய்கை -சங்கநூற் காட்சிகள்
79.	திரட்டுப் பால்
80.	திரு அம்மானை
81.	திருக்குறள் விளக்கு
82.	திருக்கோலம்
83.	திருமுருகாற்றுப்படை
84.	திருமுருகாற்றுப்படை-பொழிப்புரை
85.	திருவெம்பாவை
86.	தெய்வப் பாடல்கள்
87.	தேவாரம்-ஏழாம் திருமுறை
88.	தேன்பாகு
89.	நல்ல சேனாபதி
90.	நல்ல பிள்ளையார்
91.	நவக்கிரகம்
92.	நாடோடி இலக்கியம்

93.	நாம் அறிந்த கி.வா.ஜ.
94.	நாயன்மார் கதை - முதல் பகுதி
95.	நாயன்மார் கதை - இரண்டாம் பகுதி
96.	நாயன்மார் கதை - முன்றாம் பகுதி
97.	நாயன்மார் கதை - நன்காம் பகுதி
98.	நாலு பழங்கள்
99.	பயப்படாதீர்கள் கி.வா.ஜ.
100.	பல கதம்பம்
101.	பல்வகைப் பாடல்கள்
102.	பவள மல்லிகை
103.	பாண்டியன் நெடுஞ்செழியன்
104.	பாரி வேள்
105.	பாற்கடல் (பலர் எழுதிய சிறுகதைகள்)
106.	பிடியும் களிறும் -சங்கநூற் காட்சிகள்
107.	பின்னு செஞ்சடை
108.	புகழ் மாலை
109.	புது டயரி
110.	புது மெருகு
111.	புதுவெள்ளம்-சங்கநூற் காட்சிகள்
112.	பெரிய புராண விளக்கம் பகுதி-1
113.	பெரிய புராண விளக்கம் பகுதி-2
114.	பெரிய புராண விளக்கம் பகுதி-4
115.	பெரிய புராண விளக்கம் பகுதி-5
116.	பெரிய புராண விளக்கம் பகுதி-6
117.	பெரிய புராண விளக்கம் பகுதி-7

கி. வா. ஜகந்நாதன்

ஒரு பன்முக ஆளுமையின் கலை மற்றும் தமிழ்த்தொண்டுகள்

https://www.tamilgk.kalvisolai.com/2025/06/blog-post_20.html



கிருஷ்ணராயபுரம் வாசுதேவ ஜகந்நாதன் (ஏப்ரல் 11, 1906 - நவம்பர் 4, 1988), பரவலாக கி. வா. ஜகந்நாதன் என அறியப்படும் இவர், தமிழ் இலக்கிய உலகில் ஒரு அசைக்க முடியாத தூணாக விளங்கினார். இதழாளர், கவிஞர், எழுத்தாளர், நாட்டுப்புறவியலாளர் எனப் பன்முகத் திறன்கொண்ட இவர், தமிழ்மொழிக்கும் இலக்கியத்திற்கும் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன. அறிஞர் உ.வே. சாமிநாதய்யரின் மாணாக்கராகிய இவர், கலைமகள் இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்று, பல புதிய பரிமாணங்களை இலக்கிய உலகுக்குக் கொண்டுவந்தார்.

இலக்கியப் பணிகள் மற்றும் விருதுகள்

கி. வா. ஜகந்நாதனின் படைப்புகள் தமிழ் இலக்கியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அவரது "வீரர் உலகம்" எனும் இலக்கிய விமர்சன படைப்பு, 1967 ஆம் ஆண்டில் உயரிய சாகித்திய அகாதமி விருதைப் பெற்று, அவரது விமர்சனப் பார்வைக்கும் ஆழ்ந்த புலமைக்கும் மணிமகுடம் சூட்டியது. கம்பன் கழகம் இவரது நினைவாக கி. வா. ஜ பரிசை நிறுவி, தமிழ் இலக்கியத் துறையில் சிறந்து விளங்குபவர்களை கௌரவித்து வருகிறது.

பெற்ற பிற சிறப்புகளும் அங்கீகாரங்களும்

கி. வா. ஜகந்நாதன் தனது வாழ்நாளில் பல சிறப்புகளையும் அங்கீகாரங்களையும் பெற்றார். 1933 ஆம் ஆண்டில் "வித்துவான்" பட்டம் பெற்ற அவர், அவரது

புலமைக்கு மேலும் மெருகூட்டினார். 1949 ஆம் ஆண்டில் "திருமுருகாற்றுப்படை அரசு", 1951 ஆம் ஆண்டில் "வாகீச கலாநிதி", மற்றும் 1982 ஆம் ஆண்டில் "இராஜ சர் அண்ணாமலை செட்டியார் நினைவுப்பரிசு" போன்ற பட்டங்களும் விருதுகளும் அவரது இலக்கியப் பணிகளைப் போற்றும் வகையில் வழங்கப்பட்டன.

முக்கிய நூல்கள்

கி. வா. ஜகந்நாதன் பல்வேறு துறைகளில் எண்ணற்ற நூல்களை எழுதியுள்ளார். அவரது படைப்புகள் பண்டைய இலக்கியம் முதல் நாட்டுப்புறவியல் வரை பரந்த தளத்தில் அமைந்துள்ளன. அவரது குறிப்பிடத்தக்க சில நூல்கள்:

- ***அதிகமான் நெடுமான் அஞ்சி***
- ***அதிசயப் பெண்***
- ***அப்பர் தேவார அமுது***
- ***அபிராமி அந்தாதி***
- ***அபிராமி அந்தாதி விளக்கம்***
- ***அமுத இலக்கியக் கதைகள்***
- ***அழியா அழகு***
- ***அறப்போர் - சங்கநூற் காட்சிகள்***
- ***அறுந்த தந்தி***
- ***அன்பின் உருவம்***

நாட்டுப்புறவியல் பணி

கி. வா. ஜகந்நாதன் தமிழ் பழமொழிகளையும், நாடோடிப் பாடல்களையும் சேகரித்து ஆவணப்படுத்துவதில் தனிச்சிறப்புப் பெற்றவர். ஒரு பல்கலைக்கழகமே செய்ய வேண்டிய பணியை, தனியொருவராகச் செய்து, தமிழ் நாட்டுப்புறவியலுக்குப் பெரும் தொண்டாற்றினார். அவரது இந்த அரும்பணி, தமிழ் கலாச்சாரத்தின் ஒரு முக்கிய அங்கத்தைப் பாதுகாப்பதோடு, வருங்காலத் தலைமுறையினருக்கு நமது மரபுகளைக் கற்றுணர ஒரு பொக்கிஷமாகவும் திகழ்கிறது.


முடிவு

கி. வா. ஜகந்நாதன், தனது வாழ்நாள் முழுவதும் தமிழ்மொழிக்கும் இலக்கியத்திற்கும் அயராது உழைத்த ஒரு மகத்தான ஆளுமை. அவரது எழுத்துக்கள், விமர்சனங்கள், மற்றும் நாட்டுப்புறவியல் சேகரிப்புகள், தமிழ்

இலக்கிய உலகில் அழியாத முத்திரையைப் பதித்துள்ளன. அவரது படைப்புகள் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு உத்வேகமாக அமைந்து, என்றும் நிலைத்து நிற்கும்.

(😊)(😊) @@@@@@ (😊)(😊)



















கி.வா. ஜகந்நாதன் (கி.வா.ஜ) பன்முகத்திறன் கொண்ட தமிழ் எழுத்தாளர், பத்திரிக்கையாளர் மற்றும் உரையாசிரியர் ஆவார். இவர் 200-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார், இதில் "வீரர் உலகம்" (சாகித்ய அகாதமி விருது), அபிநவ அந்தாதி விளக்கம், தமிழ் தாத்தா உ.வே.சா-வின் வாழ்க்கை வரலாறு மற்றும் பல பக்தி இலக்கிய விளக்க உரைகள் குறிப்பிடத்தக்கவை. சிறுகதைகள், கட்டுரைகள், மற்றும் இலக்கியத் திறனாய்வு நூல்களையும் படைத்துள்ளார்.

கி.வா. ஜகந்நாதன் எழுதிய முக்கியமான நூல்கள்

- **இலக்கியம் & திறனாய்வு:** வீரர் உலகம் (சாகித்ய அகாதமி விருது), தமிழ் நூல் அறிமுகம், கவியமும் ஓவியமும், கவிஞர் விருந்து, பாட்டுத் தேனீ, காப்பியமும் ஓவியமும்.

- **பக்தி உரை நூல்கள்:** அபிராமி அந்தாதி விளக்கம், கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள், கந்தர் அனுபூதி, திருமுருகாற்றுப்படை, அப்பர் தேவார அமுது, கந்தர் கலிவெண்பா


- **வரலாறு & வாழ்க்கை வரலாறு:** தமிழ்த்தாத்தா (உ.வே.சாமிநாதையர் சரித்திரம்), அதியமான் நெடுமான் அஞ்சி, கரிகால் வளவன், கோவூர் கிழார், பாண்டியன் நெடுஞ்செழியன்.

- **கதைகள் & கட்டுரைகள்:** அமுத இலக்கியக் கதைகள், அழியா அழகு, அதிசயப் பெண், கிழவியின் தந்திரம், சின்னச் சின்னக் கதைகளும் சிரிப்புச் சிலேடைகளும், மலை அருவி (நாட்டுப்புறப் பாடல்கள்).

- **பயண இலக்கியம்:** இலங்கைக் காட்சிகள்.

- **சிரிப்புச் சித்திரங்கள்:** சிரிப்புச் சிலேடைகள், கி.வா.ஜ. பேசுகிறார், மச்சு வீடு.

சிறப்பு: இவரின் பல நூல்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மூலம் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.



தமிழ்ப் பழமொழிகள் :1 (2006)

https://ta.wikisource.org/wiki/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%8D_%E0%AE%AA%E0%AE%B4%E0%AE%AE%E0%AF%8A%E0%AE%B4%E0%AE%BF%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D_1

முகவுரை

இந்தப் புத்தகத்தில் ஏறத்தாழ 25,000 பழமொழிகள் உள்ளன. இவை கடந்த நாற்பது ஆண்டுகளாக நான் சேகரித்தவை. சொற்பொழிவு செய்யும் பொருட்டு வெளியூர்களுக்குச் சென்ற காலங்களில் அங்கே உள்ள ஆடவர்களிடமும் பெண்மணிகளிடமும் கேட்டுப் பழமொழிகளை எழுதி வந்தேன். பெரும்பாலும் முதிய பெண்மணிகளே பல பழமொழிகளைச் சொன்னார்கள். பழமொழியை முதுமொழி என்றும் வசனம் என்றும் கூறுவர். பழமொழிகள் அடங்கிய பாடல்களைப் பெற்ற நூல்கள் பழமொழி நானூறு, கோவிந்தசதகம், தண்டலையார் சதகம், இரத்தின சபாபதி மாலை, அருணாசல கவி இராம நாடகக் கீர்த்தனை முதலியவை.

இந்தப் பழமொழிகளில் பல்வேறு சாதியினரைக் குறை கூறி உள்ளவை பல உண்டு. அவற்றைக் கண்டு அந்தச் சாதியைச் சேர்ந்த அன்பர்கள் சினம் கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன். இழித்துக் கூறுவதில் எந்தச்

சாதியினரையும் விட்டு வைக்கவில்லை. பார்ப்பனர்களை இழித்துக் கூறும் பழமொழிகள் பல. அத்தகையவற்றை அப்படி அப்படியே காட்டியுள்ளேன். தமிழ் மக்களுடைய எண்ணம் எவ்வாறு படர்ந்தது என்பதை இவை காட்டுகின்றன.


நாடோடி இலக்கியத்தைச் சார்ந்தவை பழமொழிகள். அறிவு தெரிந்த சிறுவர் முதல் முதுமை உடையவர்கள் வரை யாவரும் தாம் பேசும் பொழுது பழமொழிகளை ஆளுவார்கள். அவரவர்களுடைய அனுபவத்துக்கு ஏற்ற வகையில் அவை இருக்கும். உபநிடதம், இலக்கிய இலக்கணங்கள் ஆகியவற்றைப் பற்றிய பழமொழிகளும் உண்டு. விலங்கினங்கள், பறவைகள், நீர்வாழ் பிராணிகள், ஊர்வன, புழுபூச்சிகள் முதலியவற்றைப் பற்றிய பழமொழிகள் பல. இவற்றை ஆராய்ந்து கட்டுரைகளை எழுதலாம். பல பெரியோர்களுடைய வரலாறுகள் சம்பந்தமான பழமொழிகளும் உண்டு. கம்பன், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களைப் பற்றிய பழமொழிகள் சில உள்ளன.

சில சில ஊர்களைப் பற்றிய பழமொழிகளும் பல உண்டு. அந்த ஊர்களில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களைப் பற்றிய பழமொழிகளும் உள்ளன.

இவ்வாறு பல பல துறைகளில் அமைந்த இந்தப் பழமொழிகள் அறிவைத் தூண்டுகின்றவை.

தமிழ் மக்கள் இந்தப் புத்தகத்தில் உள்ள பழமொழிகளைப் படித்து இன்புறுவார்கள் என்று நம்புகிறேன்.

கி. வா. ஜகந்நாதன்



கி.வா. ஜகந்நாதன் (கி.வா.ஜா) அவர்கள் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பழமொழிகளைத் தேடிச் சேகரித்து தொகுத்த ஒரு சிறந்த

நாட்டுப்புறவியலாளர் ஆவார். அவர் "தமிழ்ப் பழமொழிகள்" என்ற தலைப்பில் பல தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இந்த நூல்கள், வட்டார வழக்கு, தெய்வம், மற்றும் புலவர்கள் பற்றிய பழமொழிகளை உள்ளடக்கியவை.

கி.வா. ஜகந்நாதன் தொகுத்த பழமொழிகளின் முக்கிய அம்சங்கள்:

- **ஊர் வாரியான பழமொழிகள்:** "காஞ்சிபுரத்தில் கத்தரிக்காய், கும்பகோணத்தில் கொத்தவரங்காய்" என்பது போல ஊர்களைப் பற்றிய பழமொழிகள்.
- **தெய்வப் பழமொழிகள்:** கோயில் மற்றும் தெய்வங்கள் தொடர்பான நாட்டார் பழமொழிகள்.
- **புலவர் பழமொழிகள்:** கம்பன், ஒட்டக்கூத்தர் போன்ற புலவர்கள் தொடர்பான கதைகளுடன் கூடிய பழமொழிகள்.
- **பழமொழித் தொகுப்பு:** ஏறத்தாழ 22,000-க்கும் மேற்பட்ட தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்து, அவற்றுக்கு விளக்கம் அளித்துள்ளார்.
- **நூல் வெளியீடு:** "தமிழ்ப் பழமொழிகள்" 1 முதல் 4 தொகுதிகள் வரை வெளியாகியுள்ளன.

அவர் பழமொழிகளை வெறும் வாக்கியங்களாகப் பார்க்காமல், அதன் பின்னால் இருக்கும் பண்பாடு மற்றும் அறிவைத் தேடி தொகுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

@@@@@ (😊)(😊) @@@@@

கி.வா.ஜகந்நாதன் (கி.வா.ஜ) தமிழ் இலக்கியத்தில் சிறுகதைகள், கட்டுரைகள் மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மூலம் நன்கு அறியப்பட்டவர். நகைச்சுவை, சமூக விமர்சனம், மற்றும் எளிமையான நடை இவருடைய கதைகளின் சிறப்பம்சங்களாகும். கலைமகள் இதழில் பல கதைகளை எழுதியுள்ளார்.

பிரபலமான சிறுகதை தொகுப்புகள் மற்றும் கதைகள்:

- **குமரியின் மூக்குத்தி**
- **புது மெருகு**
- **அதிசயப் பெண்**
- **கிழவியின் தந்திரம்**
- **அமுத இலக்கியக் கதைகள்**

- கலைஞன் தியாகம்
- **இட்டிலியும் மிளகாய்ப்பொடியும்**
- **கத்திரிக்காய் ஜுரம்**
- **டபீர் ஸ்வாமி**

முக்கியமான கதைகளின் தலைப்புகள்:


- அகத்தியம்
- யமன் வாயில் மண்
- நிர்வாண தேசம்
- நெடுஞ்சுவர்
- பூங்கோதை
- மிட்டாய்க்காரன்
- மனை-விளக்கு


கி.வா.ஜ கதைகள் பெரும்பாலும் குடும்ப உறவுகள், சமூகப் பழக்கவழக்கங்கள் மற்றும் மனித உணர்வுகளை மையமாகக் கொண்டவை. இவரது கதைகள் www.sirukathaigal.com தளம் போன்ற இணையதளங்களில் வாசிக்கக் கிடைக்கின்றன.


@@@@@@@@@@@@@@@


			



















Video

சிறுகதை தொகுப்பு /கி.வா.ஜகந்நாதன் சிறுகதைகள்

https://www.youtube.com/watch?v=ymaCeIGvhfk [48:33]

சிறுகதைகள்

https://www.sirukathaigal.com/tag/%E0%AE%95%E0%AE%BF-%E0%AE%B5%E0%AE%BE-%E0%AE%9C%E0%AE%95%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D/

கதையாசிரியர்: கி.வா.ஜகந்நாதன்

134 கதைகள் கிடைத்துள்ளன

கி. வா. ஜ என்றழைக்கப்பட்ட கி. வா. ஜகந்நாதன் (ஏப்ரல் 11, 1906 – நவம்பர் 4, 1988) குறிப்பிடத்தக்க தமிழ் இதழாளர், கவிஞர், எழுத்தாளர் மற்றும் நாட்டுப்புறவியலாளர், இருபதாம் நூற்றாண்டின்

தலைசிறந்த தமிழறிஞர்களில் ஒருவர் (1906-1988). இவர் தமிழறிஞர் உ. வே சாமிநாதய்யரின் மாணாக்கராவார். கலைமகள் இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். 1967 இல் இவரது வீரர் உலகம் என்னும் இலக்கிய விமர்சன படைப்பிற்கு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது. கம்பன் கழகம் இவரது நினைவாக கி. வா. ஜ பரிசை நிறுவி வழங்கி வருகிறது.

தமிழ்த் தந்தை கி.வா. ஜகந்நாதன் அவர்கள் 1906ம் ஆண்டு ஏப்ரல் திங்களன்று திரு. வாசுதேவ ஐயர் அவர்களுக்கும் பார்வதியம்மாளுக்கும் பிறந்தார். விளையும் பயிர் முளையிலேயே தெரிவதற்கிணங்க அவர் கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவாசகம் ஆகிய பக்தி இலக்கியங்களை ஆர்வத்துடன் படிக்கத் துவங்கினார். ஒன்பதாவது படிக்கும் போதே செய்யுட்கள் எழுதத் துவங்கினார். நடராஜரைப் பற்றி எழுதிய "போற்றிப் பத்து" என்ற பதிகமே அவருடைய கன்னி முயற்சி.

காந்திஜியின் விடுதலை இயக்கத்தில் ஈர்க்கப்பட்டு, சர்க்காவில் நூல் நூற்று, கதர் ஆடைகளையே அணியத் துவங்கினார். இறுதி நாள் வரை தூய கதர் ஆடையையே அணிந்து வந்தார்.

தமிழ்த்தாயின் கருணை நோக்கினால் உ.வே. சாமிநாத அய்யர் அவர்களுடன் அவருடைய சந்திப்பு நிகழ்ந்தது. அந்தச் சந்திப்பு தமிழ் வரலாற்றில் ஒரு பொற்காலத்தைத் துவக்கி வைத்தது என்றே சொல்லலாம். கல்லூரியில் படிப்பதை விட உ.வே.சா. அவர்களிடம் தமிழ் மாணவனாக இருப்பதையே கி.வா.ஜ விரும்பினார். சங்க நூல்கள், காவியங்கள், பிரபந்தங்கள் உள்ளிட்ட பல பாடங்களை உ.வே.சா அவர்களிடம் ஒரு நாளைக்குப் பதினோரு மணி நேரம் கற்றுக் கொண்டதோடு, குருவின் ஆராய்ச்சிகளுக்கு உறுதுணையாகவும் இருந்தார். "உ.வே.சா அவர்களுக்குக் கி.வா.ஜ. ஒரு செந்தமிழ் வாரிசு" என்று அவருடைய நினைவு அஞ்சலி மலரில் குறிப்பிடுகிறார்கள்.

1932ம் ஆண்டு "கலைமகள்" பத்திரிக்கை துவங்கியபோது கி.வா.ஜ. அவர்களைப் பதிப்பாசிரியராக உ.வே.சா. அவர்கள் சிபாரிசு செய்தார்கள். துவங்கிய அன்று முதல் இறுதி வரை அவருடைய வாழ்க்கையுடன் கலைமகள் ஒன்றியிருந்தாள். ஒரு இலட்சியப் பத்திரிக்கையாக அதை நடத்தி வந்தார். பத்திரிகைப் பணி, உ.வே.சா. அவர்களுடன் இடையறாத தமிழ்ப் பணி என ஓய்வின்றி உழைத்தார்.

1942-ம் ஆண்டு ஏப்ரல் 25-ம் தேதி தன் தந்தையை இழந்த நான்கே நாட்களுக்குள் அவரின் குருவான சாமிநாத அய்யரை இழந்தது தான் அவருக்குப் பேரிழப்பாக இருந்தது. அவரின் வரலாற்றை என் ஆசிரியர் பிரான் என்ற தலைப்பில் நூலாக எழுதி நிறைவு செய்தார்.

கி.வா.ஜ. ஒரு பன்முகம் கொண்ட தமிழ் வித்தகர். தனது எளிமையான பேச்சாற்றலால் உலகத்தைக் கவர்ந்தவர். அவர் பங்கு பெறாத பட்டி மன்றங்கள் கிடையாது. அவருடைய பேச்சில் நகைச்சுவையும், நடைமுறை உதாரணங்களும் கலந்து மிகக் கடினமான பொருட்களைக் கூட எளிதாகக் காட்டும். அவருடைய சிலேடைகள் மிகவும் பிரபலமானவை. அவருடைய சிலேடைப் பேச்சுக்களே தனி நூலாக வெளிவந்துள்ளது. அவர் நாட்டுப்புற இலக்கியத்தில் மிக்க ஈடுபாடு கொண்டு பல கிராமங்களுக்குச் சென்று, பாடல்களையும், பழமொழிகளையும் சேகரித்து அனைவரும் ரசிக்கும் வண்ணம் ஏற்றப் பாடல்கள், திருமணப் பாடல்கள், தெய்வப்பாடல்கள், சுவையான தமிழ்ப் பழமொழிகள் என நான்கு தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார்.

சிறந்த சிறுகதை எழுத்தாளராகவும் விளங்கியவர். கி.வா.ஜ. அவருடைய கதைகளில் நகைச்சுவை இழையும். பிற மொழிக் கதைகளையும், புராண வரலாறுகளையும் அடிப்படையாகக் கொண்ட கதைகளையும் அவர் தந்திருக்கிறார்.

ஜோதி என்ற பெயரில் அவர் கவிதைகள் பல பொழிந்திருக்கிறார். காஞ்சிப் பெரியவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவருக்கு "வாகீச கலாநிதி", "திருமுருகாற்றுப்படை அரசு" என்ற பட்டங்களை வழங்கியுள்ளார். செந்தமிழ்ச்செல்வர், தமிழ்ப் பெரும்புலவர், திருநெறித் தவமணி போன்ற பல பட்டங்களையும் அவர் பெற்றுள்ளார்.

டாக்டர் உ.வே.சா. அவர்கள் தமிழ்த் தாத்தா என்றால், இவர் இன்றைய இலக்கிய மாணவர்களுக்குத் தமிழ்த் தந்தையாவார். அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் தமிழ்ச் சொத்துக்களோ 150க்கும் மேல் 1988-ம் ஆண்டு நவம்பர் மாதம் நான்காம் நாள் "மூச்செல்லாம் தமிழ்" என்று இருந்த கி.வா.ஜ. அவர்களின் வாழ்வு நிறைவடைந்தது.

அவரைப் பற்றி எழுத்தாளர் அகிலன் கூறியுள்ள ஒரு மேற்கோள்:-

திரு. கி.வா.ஜ. அவர்கள் ஒருவர் தான். ஆனால் அவரைத் தமிழ்த் தாத்தாவின் சீடராகக் காண்பவர்கள் பலர். கலைமகள் ஆசிரியராகக் காண்பவர்கள் பலர். எழுத்தாளராகக் காண்பவர்கள் பலர். கவிஞரான ஜோதியைக் காண்பவர்கள் பலர். தலை சிறந்த பேச்சாளராய், சமயத்துறை அறிஞராய்க் காண்பவர்கள் பலர். எல்லோருமே அவரை எந்த உருவில் கண்டாலும், அங்கே அவர் அன்பு நிறைந்தவராக, பண்பின் உருவமாக, உழைப்பிலும், உள்ளத்திலும் உயர்ந்தவராகவே தோற்றமளிக்கிறார்.

இவரது நூல்கள் சில

1. அதிகமான் நெடுமான் அஞ்சி
2. அதிசயப் பெண்
3. அப்பர் தேவார அமுது
4. அபிராமி அந்தாதி
5. அபிராமி அந்தாதி விளக்கம்
6. அமுத இலக்கியக் கதைகள்
7. அழியா அழகு
8. அறப்போர் – சங்கநூற் காட்சிகள்
9. அறுந்த தந்தி
10. அன்பின் உருவம்
11. அன்பு மாலை
12. ஆத்ம ஜோதி
13. ஆரம்ப அரசியல் நூல்
14. ஆலைக்கரும்பு
15. இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி
16. இருவிலங்கு
17. இலங்கைக் காட்சிகள்
18. இன்பமலை -சங்கநூற் காட்சிகள்
19. உதயம்
20. உள்ளம் குளிர்ந்தது
21. எல்லாம் தமிழ்
22. எழில் உதயம்
23. எழு பெருவள்ளல்கள்
24. என் ஆசிரியப்பிரான்
25. ஏற்றப் பாட்டுகள்
26. ஒளிவளர் விளக்கு

27. ஒன்றே ஒன்று
28. கஞ்சியிலும் இன்பம்
29. கண்டறியாதன கண்டேன்
30. கதிர்காம யாத்திரை
31. கதை சொல்லுகிறார் கி.வா.ஜ.
32. கந்தரலங்காரச் சொற்பொழிவுகள் பாகம் – 1
33. கந்தரலங்காரச் சொற்பொழிவுகள் பாகம் – 2
34. கந்தரலங்காரச் சொற்பொழிவுகள் பாகம் – 3
35. கந்தரலங்காரச் சொற்பொழிவுகள் பாகம் – 4
36. கந்தரலங்காரச் சொற்பொழிவுகள் பாகம் – 5
37. கந்தரலங்காரச் சொற்பொழிவுகள் பாகம் – 6
38. கரிகால் வளவன்
39. கலைச்செல்வி
40. கலைஞன் தியாகம்
41. கவி பாடலாம்
42. கவிஞர் கதை
43. கற்பக மலர்
44. கன்னித் தமிழ்
45. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி
46. காவியமும் ஓவியமும்
47. கி.வா.ஜ பேசுகிறார்
48. கி.வா.ஜ வின் சிலேடைகள்
49. கிழவியின் தந்திரம்
50. குமண வள்ளல்
51. குமரியின் மூக்குத்தி
52. குழந்தை உலகம்
53. குறிஞ்சித் தேன்
54. கோயில் மணி
55. கோவூர் கிழார்
56. சகல கலாவல்லி
57. சங்கர ராசேந்திர சோழன் உலா
58. சரணம் சரணம்
59. சித்தி வேழம்
60. சிரிக்க வைக்கிறார்
61. சிலம்பு பிறந்த கதை
62. சிற்றம்பலம் சுதந்திரமா!
63. ஞான மாலை

64. தமிழ் நாவல்கள் – நாவல் விழாக் கருத்துரைகள்
65. தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்
66. தமிழ் நூல் அறிமுகம்
67. தமிழ் வையை – சங்கநூற் காட்சிகள்
68. தமிழ்க் காப்பியங்கள்
69. தமிழ்த் தாத்தா (உ.வே.சாமிநாத ஐயர்)
70. தமிழ்ப் பழமொழிகள் – தொகுதி 1
71. தமிழ்ப் பழமொழிகள் – தொகுதி 2
72. தமிழ்ப் பழமொழிகள் – தொகுதி 3
73. தமிழ்ப் பழமொழிகள் – தொகுதி 4
74. தமிழ்ப்பா மஞ்சரி
75. தமிழின் வெற்றி
76. நாம் அறிந்த கி.வா.ஜ.
77. நாயன்மார் கதை – முதல் பகுதி
78. நாயன்மார் கதை – இரண்டாம் பகுதி
79. தனி வீடு
80. தாமரைப் பொய்கை -சங்கநூற் காட்சிகள்
81. திரட்டுப் பால்
82. திரு அம்மானை
83. திருக்குறள் விளக்கு
84. திருக்கோலம்
85. திருமுருகாற்றுப்படை
86. திருமுருகாற்றுப்படை-பொழிப்புரை
87. திருவெம்பாவை
88. தெய்வப் பாடல்கள்
89. தேவாரம்-ஏழாம் திருமுறை
90. தேன்பாகு
91. நல்ல சேனாபதி
92. நல்ல பிள்ளையார் # நவக்கிரகம்
93. நாடோடி இலக்கியம்
94. நாயன்மார் கதை – மூன்றாம் பகுதி
95. நாயன்மார் கதை – நன்காம் பகுதி
96. நாலு பழங்கள்
97. பயப்படாதீர்கள் கி.வா.ஜ.
98. பல கதம்பம்
99. பல்வகைப் பாடல்கள்
100. பவள மல்லிகை

101. பாண்டியன் நெடுஞ்செழியன்
102. பாரி வேள்
103. பாற்கடல் (பலர் எழுதிய சிறுகதைகள்)
104. பிடியும் களிறும் -சங்கநூற் காட்சிகள்
105. பின்னு செஞ்சடை
106. புகழ் மாலை
107. புது டயரி
108. புது மெருகு
109. புதுவெள்ளம்-சங்கநூற் காட்சிகள்
110. பெரிய புராண விளக்கம் பகுதி-1
111. பெரிய புராண விளக்கம் பகுதி-2
112. பெரிய புராண விளக்கம் பகுதி-4
113. பெரிய புராண விளக்கம் பகுதி-5
114. பெரிய புராண விளக்கம் பகுதி-6
115. பெரிய புராண விளக்கம் பகுதி-7
116. பெரிய புராண விளக்கம் பகுதி-8
117. பெரிய புராண விளக்கம் பகுதி-9
118. பெரிய புராண விளக்கம் பகுதி-10
119. பெரும் பெயர் முருகன்
120. பேசாத நாள்
121. பேசாத பேச்சு
122. மனை விளக்கு-சங்கநூற் காட்சிகள்
123. மாலை பூண்ட மலர்
124. முந்நீர் விழா
125. முருகன் அந்தாதி # முல்லை மணம்
126. மூன்று தலைமுறை
127. மேகமண்டலம்
128. வழிகாட்டி வளைச் செட்டி – சிறுகதைகள்
129. வாருங்கள் பார்க்கலாம்
130. வாழ்க்கைச் சுழல்
131. வாழும் தமிழ்
132. விடையவன் விடைகள்
133. விளையும் பயிர்
134. வீரர் உலகம்

மனை விளக்கு (சங்கநூற் காட்சிகள்) – 1951

முகவுரை

தமிழ் மொழியைப் பலவகையிலே சிறப்பிறத்துச் சொல்வதுண்டு. செந்தமிழ், பசுந்தமிழ், தீந்தமிழ். நற்றமிழ் என்று பாராட்டுவார்கள். இப்படி மற்ற மொழி களையும் அவற்றைப் பேசுவோர் பாராட்டிச் சொல்வதும் இயல்புதான். ஆனால் தமிழின் சிறப்பை வேறு ஒருவித மாகச் சொல்வதுண்டு. அந்தச் சிறப்பு வேறு மொழி களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. "சங்கமலி செந்தமிழ்" "சங்கத்தமிழ்' என்று சிறப்பித்துப்பாராட்டும் தமிழ், சங்கங்களிலே சிறப்பாக வளர்ச்சி பெற்றது. மக்கள் பேசுவதனால் தமிழ் விரிந்து பரந்தது. ஆனால் அதனோடு நின்றிருந்தால் இலக்கியச் செல்வம் வளர்ச்சி பெற்றிராது. புலவர்கள் பல நூல்களை இயற்றுவதனால் தான் அந்தச் செல்வம் ஒரு மொழியில் மிகுதியாகும்.

தமிழில் பல புலவர்கள் பல பல நூல்களை இயற்றி னார்கள். அந்த நூல்கள் யாவுமே தமிழ் நாட்டாரின் பாராட்டைப் பெறவில்லை. இயற்றப்பெற்ற நூல்கள் எல்லாமே நின்று நிலவும் பெருமையைப் பெற முடியுமா? தமிழ்ச் சங்கம் என்ற புலவர் கூட்டம் ஒன்று இருந்தது. அதில் பல சிறந்த புலவர்கள் இருந்தார்கள். அழகிய கவிகளைப் பாடினார்கள். நாடு முழுவதும் வேறு பல புலவர்கள் இருந்தனர். அவர்களும் பல கவிகளை இயற்றினர். ஆயினும் அப்புலவர்கள் தங்கள் கவிகளைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றியதனால்தான் நாட்டாரின் நன்மதிப்பைப்பெற முடிந்தது.இவ்வாறு தமிழ் தமிழ் நூல்கள் தக்கவர்களுடைய பார்வை பெற்றுத் தமிழ் நாட்டில் உலவி வந்தன. அதனால்தான் சங்கத் தமிழ் என்ற பெருமை தமிழுக்கு வந்தது.

தமிழ்ச் சங்கத்தை வளர்த்தவர் பாண்டிய மன்னர். பாண்டி நாடு தமிழ் நாட்டின் நடுநாயகமாக இருந்தது. செந்தமிழ் நாடு, தமிழ் நாடு என்ற பெயர்கள் அந்த நாட்டுக்குப் பழங்காலத்தில் வழங்கி வந்தன. பாண்டி நாட்டில் மக்கள் பேசும் தமிழ்தான் நல்ல தமிழ் என்றுகூட

அக்காலத்தில் நிலைத்தார்கள் அதன் தலை நகரத்தில் தமிழ்ச் சங்கம் இருந்து வந்தது. அங்கே இருந்தாலும் மற்ற நாடுகளிலிருந்து புலவர்கள் வந்தார்கள் முடிய ணிந்த மன்னராகிய சேர சோழ பாண்டியர் என்ற மூவரும் தமிழ் நாட்டை ஆண்டு வந்கனர். இவர்களுக் குள்ளே பகைமை எப்பொழுதாவது இருந்தாலும், பிறநாட்டிலுள்ள புலவர்கள் பாண்டிநாட்டுக்கு வரு வதற்கு ஒரு தடையும் இருந்ததில்லை சங்கத்தில் இருந்த புலவர்கள் அத்தனை பேரும் பாண்டி நாட்டார் என்று சொல்ல முடியாது. பல நாடுகளில் பல ஊர்களில் பிறந்து வாழ்ந்த புலவர்கள் சங்கத்தில் இருந்து தமிழை வளர்த்தார்கள்.

பழைய தமிழ்ச் சங்கங்கள் மூன்று இருந்தன என்று சொல்வார்கள். ஒரே காலத்தில் அவை இருக்கவில்லை. வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு இடங்களில் இருந்தன. தொடர்ந்து பல ஆண்டுகள் நடந்து வந்த சங்கம், கடல் கோளினால் பாண்டியனுடைய தலைநகரம் மாறியபோது, வேறு இடத்திற்கு மாறவேண்டிய அவசியம் நேர்ந்தது.

இன்றுள்ள கன்னியாகுமரிக்குத் தெற்கிலும் தமிழ் நாட்டுப் பகுதி இருந்தது. குமரிமலை, குமரியாறு, பஃறுளி யாறு என்பவை அந்த நிலப் பரப்பிலே இருந்தன. மதுரை என்ற நகரம் ஒன்று இருந்தது. அதுவே அக்காலத்துப் பாண்டி நாட்டின் தலைநகரம். பாண்டியர்களே தமிழ்ச் சங்கத்தை வளர்த்தமையால் அவர்களுக்குரிய தலைநகரமே தமிழ்த் தாய்க்கும் தலைநகரமாக விளங்கியது. அந்தப் பழைய மதுரையையும் பாண்டிநாட்டைச் சார்ந்த ஒரு பகுதியையும் கடல்பொங்கி அழித்துவிட்டது. அதனால் அந்த நாட்டின் நிலை மாறியது. பாண்டிய மன்னன் வடக்கே உள்ள கபாடபுரம் என்ற நகரத்தைத் தன் தலை நகரம் ஆக்கிக்கொண்டான். அந்த நகரத்தைப் பற்றிய செய்தி வால்மீகி ராமாயணத்தில் வருகிறது. பாண்டிய மன்னன் அங்கே தமிழ்ச் சங்கத்தையும் நிறுவினான்.

மீண்டும் மற்றொரு கடல்கோள் வந்தது. கபாடபுரம் இருந்த பாண்டி நாட்டின் தென்பகுதியைக் கடல் விழுங்கியது. பாண்டிய மன்னன் அப்போதைக்கு வடக்கே மணலூர் என்ற இடத்தில் சென்று தங்கினான். இந்த நாட்டில் கடற்கரைக்கு நெடுந் தூரத்தில் இருக்கும்படி நாமே ஒரு நகரம் புதியதாக அமைத்துக்கொள்ள வேண்டும். என்ற நினைவு அவனுக்கு உண்டாயிற்று. இறைவன் திருவருளைத் துணைக்கொண்டு ஒரு நகரத்தை நிறுவினான் பாண்டி நாட்டுக்குப் பழங்காலத்தில் தலை நகரமாக இருந்த மதுரையின் பெயரையே அதற்கு வைத்தான். இந்தப் புதிய மதுரையில் தமிழ்ச் சங்கத்தை யும் நிறுவி வளர்த்து வரலானான்.

இந்த மூன்று தலைநகரங்களிலும் இருந்த தமிழ்ச் சங்கங்களைத் தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என்று சொல்வார்கள். சங்கத்தை அக்காலத்து மக்கள் எவ்வளவு உயர்வாகக் கருதினார்கள் என்பதற்கு அதைப் பற்றிய வரலாறுகளே சாட்சி. சாதாரண மக்கள் கூடிப் பேசும் இடம் அது என்ற நினைவே அவர்களுக்கு இல்லை; தமிழ்த் தெய்வத்தின் திருக்கோயில் அது என்றும், சங்கப் புலவர்களெல்லாம் நாமகளின் அவதாரம் என்றும் நம்பி வழிபட்டார்கள். அதுமட்டுமல்ல; சிவபெருமான், முருகன் திருமால் ஆகியவர்கள் கூடப் புலவர்களாக முதற் சங்கத்தில் இருந்தார்கள் என்று சொல்லிச் சொல்லி அதன் மதிப்பை அதிகமாக்கினார்கள். சங்கத் தமிழாக இருந்தது தெய்வத்தமிழாகவும் விளங்க வேண்டுமென்பது அவர்கள் ஆசை.

இறையனார் அகப்பொருள் என்ற இலக்கண நூலின் உரையில் இந்த மூன்று சங்கங்களின் வரலாறுகளும் வருகின்றன. தலைச்சங்க காலத்தில் தோன்றிய நூல் களில் ஒன்றேனும் இப்போது கிடைக்கவில்லை. இடைச் சங்கத்தில் எழுந்த நூல்களில் தொல்காப்பியத்தைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்கவில்லை நல்ல வேளையாக சிறந்த தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியமாவது மிஞ்சியதே என்று மகிழ்ச்சியடைய வேண்டும்.

மூன்றாவது சங்கமாகிய கடைச் சங்கத்தில் நாற்பத் தொன்பது புலவர்கள் இருந்தார்களென்று சொல் வார்கள். அக்காலத்தில் புலவர்கள் அவ்வப்போது பல பாடல்களைப் பாடினார்கள். அவை தமிழ் நாட்டில் அங்கங்கே வழங்கிவந்தன. நாளடைவில் அவை மறந்து போய்விடுமோ என்ற அச்சம் உண்டாயிற்று. சில பாடல்கள் மறைந்துகொண்டும் வந்தன. ஆதலின், கடைச் சங்க காலத்தின் இறுதிப் பகுதியில் வாழ்ந்த புலவர்களும் அரசர்களும் அங்கங்கே வழங்கிய பாடல் களைத் தொகுத்து ஒழுங்குபடுத்த எண்ணினார்கள். சில அரசர், புலவர்களின் துணைகொண்டு இந்தத் தொகுப்பு வேலையைச் செய்தார்கள் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்று அவற்றை மூன்று வரிசையாக வகுத்து அமைத்தார்கள். பத்துப் பாட்டு என்பது நீண்ட பாடல்கள் பத்து அடங்கிய தொகுதி. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்ற பெயருடைய பத்து நூல்கள் அந்தத் தொகுதியில் இருக்கின்றது.

எட்டுத்தொகை என்பது எட்டு நூல்கள் சேர்ந்த வரிசை. அந்த வரிசையில் உள்ள ஒவ்வொரு நூலும் பல பாடல்களின் தொகுதி. அதனால் இவற்றைத் தொகை நூல்கள் (Anthology) என்று சொல்வார்கள். பிற் காலத்தில் தனிப் பாடல் திரட்டு என்ற பெயருடன் சில நூல்கள் வந்துள்ளன. அவற்றைப் போன்ற திரட்டு நூல்களே இவை. பதினெண் கீழ்க்கணக்கு என்பவை பதினெட்டுச் சிறு நூல்கள் அடங்கியவை. அவற்றிற் பல, நீதிநூல்கள், திருக்குறள், பதினெண் கீழ்க்கணக்கைச் சார்ந்ததே.

எட்டுத் தொகையைத் தொகுக்கும்போது சில வரை யறைகளை மேற் கொண்டு தொகுத்திருக்கிறார்கள். காதலைப் பற்றிச் சொல்லும் அகப்பொருட் பாடல்களை யெல்லாம் தனியே தொகுத்தார்கள்.

அப்படியே வாழ்க் கையின் மற்றப் பகுதிகளைப் பற்றிய பாடல்களையும் தொகுத்து அமைத்தார்கள். இவ்வாறு தொகுத்துவைத்த நூல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவை. ஐங்குறுநூறு என்பது அகப் பொருளைச் சார்ந்து ஐந்து திணைகளையும் பற்றித் தனித் தனியே நூறுநூறாக ஐந்து புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுதி.பதிற்றுப்பத்து என்பது சேர அரசர்கள் பத்துப் பேர்மேல் பத்துப் பத்துப் பாட்டாகப் பத்துப் புலவர்கள் பாடிய நூறு பாடல்கள் அடங்கியது. பரிபாடல் அந்தப் பெயருள்ள பாவகையால் அமைந்த பல புலவர்களின் பாடல் தொகுதி. ஐந்து திணைபற்றி ஐம்பெரும் புலவர்கள் தனித்தனியே கலிப்பாவாகப் பாடிய பாடல்கள் அமைந்த நூல் கலித்தொகை. புறப்பொருள் பற்றிய நானூறு செய்யுட்களை உடையது புறநானூறு. அகப்பொருள் பற்றிய மற்றப் பாடல்களைத் தொகுத்து அடிக் கணக்குப் பண்ணினார்கள். சிறிய பாட்டுகளைத் தொகுத்து அவற்றைக் குறுந்தொகையென்ற பெயரோடும், அடுத்த படி சற்றுப் பெரிய பாடல்களைத் தொகுத்து நற்றிணை என்ற பெயரோடும், பின்னும் பெரிய பாடல்களைத் தொகுத்து அகநானூறு என்ற பெயரோடும் உலவ விட்டனர். நாலடி முதல் எட்டடிவரையில் உள்ள பாடல்கள் நானூறு குறுந்தொகையில் இருக்கின்றன. ஒன்பதடி முதல் பன்னிரண்ட டிவரையில் உள்ள பாடல்கள் நானூறு நற்றிணையில் உள்ளன. பதின்மூன்றடி முதல் முப்பத்தோரடி வரையில் உள்ள பாடல்களை அகநானூற் றில் காணலாம்; அந்த நூலிலும் நானூறு பாடல்கள் இருக்கின்றன

சங்க நூல்கள் வழக்கற்றுப்போய், அவற்றைப் படிப் பவரும் கற்பிப்பவரும் இல்லாமல் தமிழ்நாடு சில காலத்தைப் போக்கியது. என்னுடைய ஆசிரியப்பிரா னாகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் சங்க நூல் களைத் தேடித் தொகுத்து ஆராய்ந்து வழுக்களைந்து அச்சிடலானார்கள். பெரும் பகுதியை அவர்கள் வெளி யிட்டார்கள். அவர்களோடு பழகியவர்களும், அவர்களுடன் இருந்து ஆராய்ச்சி செய்தவர்களும், அவர்கள் நூற்பதிப்பைக் கண்டு

உணர்ந்தவர்களும் சில நூல்களை வெளிப்படுத்தினார்கள். தமிழ் நாட்டில் காவியத் தமிழும் தோத்திரத் தமிழும் சமயத் தமிழும் பிரபந்தத் தமிழுமே வழங்கிவந்த காலத்தில் அவர்கள் அவதாரம் செய்து சங்கத் தமிழைப் புதையலைப் போல எடுத்து வழங்கா விட்டால் இன்று தமிழுக்குள்ள ஏற்றம் வந்திருக்குமா? ஆகவே, சங்கத் தமிழ்ச் சோலைக்குள் புகும் யாவரும் அவர்களை நன்றியறிவுடன் நினைப்பது கடமையாகும்.

2

உணர்ச்சியைத் தலைமையாகக்கொண்டு, காதலன் காதலியரிடையே நிகழ்வனவற்றைச் சொல்வது அகப் பொருள். செயலைத் தலைமையாகக்கொண்டு உலக வாழ்க்கையில் பிறதுறைகளில் நிகழும் செய்திகளைச் சொல்வது புறப்பொருள். காதல் அல்லாத பிற எல்லாம் புறமே ஆனாலும், பெரும்பாலும் புறத்துறைப் பாடல்கள் வீரத்தைச் சார்ந்தே இருக்கக் காணலாம்.

காதலனும் காதலியும் அன்புசெய்யும் ஒழுக்கம் இரண்டு வகைப்படும். கல்யாணம் செய்து கொள்வதற்கு முன் பிறர் அறியாமல் காதல் செய்வதைக் களவொழுக்கம் என்றும், மணத்தின் பின்னர்க் கணவன் மனைவியராக வாழும் வாழ்க்கையைக் கற்பொழுக்கம் என்றும் சொல் வார்கள். கதைபோலத் தொடர்ந்து வரும் காதல் வாழ்க்கையில் பல பல கட்ட ங்கள் உண்டு. ஒவ்வொரு கட்டத்திலும் பல நிகழ்ச்சிகள் இருக்கும். தனித்தனி நிகழ்ச்சியைச் சொல்லும் பகுதியைத் துறை என்று கூறுவார்கள். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு துறையில் அமைந்திருக்கும். ஒவ்வொன்றும் காதலன், காதலி, தோழி முதலியவர்களில் யாரேனும் ஒருவருடைய கூற்றாக இருக்கும். காதலனைத் தலைவனென்றும், காதலியைத் தலைவியென்றும் சொல்வது மரபு. தோழியைப் பாங்கி என்றும், தோழனைப் பாங்கன்

என்றும், பெற்ற தாயை நற்றாய் என்றும், வளர்த்த தாயைச் செவிலி யென்றும் சொல்வார்கள்.

பிறருடைய உதவியும் தூண்டுதலும் இல்லாமல் அழகும் அறிவும் சிறந்த தலைவன் ஒருவன் தன் தகுதிக்கு ஏற்ற அழகி ஒருத்தியைத் தனியிடத்திலே சந்திக்கிறான். அவர்கள் ஒருவரோடு ஒருவர் காதல் கொண்டு அள வளாவுகிறார்கள். மறுநாளும் அப்படியே தனியிடத்தில் சந்திக்கிறார்கள். பிறகு தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனைப் பாங்கன் காண்கிறான். அவனிடத்தில் ஏதோ ஒரு வகையான சோர்வு இருப்பதை உணர்ந்து, என்ன காரணம் என்று வினவுகிறான். தான் ஒரு மங்கையின் காதல் வலையிற் பட்டிருப்பதை அவன் எடுத்துச் சொல் கிறான். பாங்கன் அம் மங்கை நல்லாள் இருக்கும் இடத் தைத் தலைவன் வாயிலாக அறிந்து, அவ்விடம் சென்று அவளை அறியாமல் அவளைக் கண்டு அவள் தலைவனுக்கு எவ்வகையாலும் ஏற்றவளே என்பதை உணர்ந்து மீண்டு வந்து தலைவனிடம் சொல்கிறான்.

மீண்டும் தலைவனும் தலைவியும் சந்தித்து அளவளாவு கிறார்கள். தலைவி தன் உயிர்த் தோழி இன்னாள் என்பதைக் குறிப்பால் தலைவனுக்குப் புலப்படுத்த அவன் அவளைத் தங்கள் காதல் வாழ்க்கைக்குத் துணையாகக் கொள்ளலாம் என்று நினைக்கிறான். அவளை அணுகித்தான் தலைவியி னிடம் காதல் பூண்டுள்ளதைத் தெரிவிக்கிறான். தோழி ஏதேதோ காரணங் கூறி அவனை மறுக்கிறாள். மீண்டும் மீண்டும் தன் காதலின் ஆழத்தைத் தலைவன் புலப்படுத்து வதோடு, தலைவிக்கும் தனக்கும் தொடர்பிருப்பதையும் குறிப்பிக்கிறான், அப்பால் தோழி அவன் உண்மைக் காதலன் என்று தேர்ந்து, தலைவியினிடம் அவன் காதலைப் பற்றிச் சொல்கிறாள். முதலில் தலைவி ஒன்றும் அறியாத வள்போல் இருக்கிறாள். அப்பால் மறுப்பவளைப்போலப் பேசுகிறாள்.தோழி மேலும் வற்புறுத்தவே, தலைவி ஒப்புக் கொள்பவளைப் போலப் பேசுகிறாள். அதுமுதல் தோழி யின் துணையைக் கொண்டே பகற்காலத்தில் தினைப்புனத்

தாலும் வீட்டுக்குப் புறம்பான வெளியிடங்களிலும் தன் காதலனைச் சந்தித்து வருகிறாள். இடையில் சில நாள் அவனைச் சந்துக்க முடியாமற் போகின்றது. அப்பொழு தெல்லாம் அவள் மிக்க துன்பத்தை அடைகிறாள்.

தினைப்புனத்தைக் காத்தல், பூக்கொய்தல் முதலி வற்றுக்காக வீட்டுக்குப் புறத்தே வந்து செல்லும் தலைவியை அவளுடைய தாய் வீட்டிலே இருக்கும்படி சொல்லிக் கட்டுப்பாடு செய்கிறாள். அதைத் தோழி வாயிலாக அறிந்த தலைவன் அத்தோழியின் உதவி பெற்று இரவுக் காலங்களில் வந்து யாரும் அறியாமல் தலைவியைச் சந்தித்துச் செல்கிறான். இந்த இரவுச் சந்திப்புக்கும் சில நாட்கள் தடை நிகழும் அப்பொழுது தலைவி தலைவனைக் காணாது வருந்துவாள்

இவ்வாறு யாரும் அறியாமல் காதல் செய்வதற்குப் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. அவற்றால் மனம் வாடிய தலைவியைக் கண்ட தோழி, தலைவன் தலைவியை மணந்து கொண்டு வாழ்வதே தக்கதென்று நினைக்கிறாள். தன் கருத்தைக் குறிப்பாகத் தலைவனுக்குத் தெரிவிக் கிறாள். அவன் அதனை ஏற்றுக் கொண்டு, கல்யாணத்தின் பொருட்டுப் பொருள் தேடப் பிரிகிறான். அப்பொழுது அவன் பிரிவால் தலைவிக்குத் துயரம் உண்டாகிறது.

தலைவன் மணம் செய்துகொள்வதற்குரிய முயற்சி களைச் செய்கிறான். அவனைத் தலைவியின் தாய் தந்தையர் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்றோ, வேறு யாருக்கேனும் அவளை மணஞ் செய்து கொடுக்க எண்ணியிருக்கின்றனர் என்றோ தெரிய வந்தால், தலைவி ஒரு தலைவனிடம் ஈடுபட்டிருக்கிறாள் என்பதைத் தோழி அவர்களுக்குக் குறிப்பாகப் புலப்படுத்துவாள். அதனை உணர்ந்து அவர் கள் தலைவனுக்கு அவளை அளிக்க உடம்படுவார்கள்.

சில சமயங்களில் அவர்கள் உடம்படாவிட்டால் தலைவன் தலைவியை ஒருவரும் அறியாமல் அழைத்துக் கொண்டு தன் ஊர்சென்று அங்கே அவளை மணந்துகொள் வான். அவர்கள் போன பிறகு தலைவியின் உ ண்மைக் காதலை அறிந்த தாயும் செவிலியும் வருந்துவார்கள். செவிலித்தாய், 'நான் போய் என் மகள் எங்கிருந்தாலும் அழைத்து வருகிறேன்' என்று புறப்படுவாள். இதுவரை யில் உள்ளது களவு என்ற பிரிவு.

காதலர் இருவரும் மணம் புரிந்து கொண்டு கணவன் மனைவியாக வாழ்வார்கள். அப்போது சில காரியங்களுக் காகக் கணவன் தன் வீட்டை விட்டுச் சென்று சில காலம் தலைவியைப் பிரிந்திருப்பான். அந்தப் பிரிவால் இருவருக் கும் வருத்தம் உண்டாகும். இல்லறத்தை வளப்படுத்தும் பொருட்டுப் பொருள் தேடத் தலைவன் பிரிவது உண்டு. கல்வி கற்கப் பிரிவது உண்டு. அரசனுக்குத் தூதுவனாக நின்று தூது உரைப்பதற்காகவும், போரில் துணை புரிவதற் காகவும், நாட்டைக் காப்பதற்காகவும் பிரிந்து செல்வது உண்டு.

பரத்தையினிடம் விருப்பம் கொண்டு தலைவன் சில சமயம் செல்வது உண்டு. அப்போது தலைவி ஊடல் கொள்வாள். தோழியின் உதவியாலும் தன்னுடைய முயற்சியாலும் தலைவியின் ஊடலைப் போக்கத் தொடங்கு வான் தலைவன். தலைவி ஊடலொழிந்து தலைவனுடன் ஒன்றுபட்டு வாழ்வாள். வை கற்புக் காலத்து நிகழ்ச்சிகள்.

இந்தக் காதற் கதையில் நானூறுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் அல்லது துறைகள் உண்டு. சங்க நூல்களில் இந்தத் துறைகள் தொடர்ச்சியாக இருப்பதில்லை; கலந்து கலந்து வரும். இவற்றைக் கதைபோலக் கோத்துத் தொடர்பு படுத்தி ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு செய்யுள் அமைத்துப் புலவர்கள் பாடியிருக்கும் ஒருவகை நூலுக்குக் கோவை

என்றுபெயர் ; அகப்பொருட் கோவை யென்றும் ஐந்திணைக் கோவையென்றும் சொல்வார்கள்.

இந்தப் புத்தகத்தில் நற்றிணையிலிருந்து எடுத்த ஒன்பது பாடல்களுக்குரிய விளக்கங்களைக் காணலாம். முதற்பாட்டாகிய கடவுள் வாழ்த்து அகத்துறையை சார்ந்ததல்ல. எட்டுத் தொகையில் உள்ள நூல் ஒவ்வொன்றிலும் கடவுள் வாழ்த்து உண்டு. இந்தக் கடவுள் வாழ்த்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந் தேவனார் என்பவர். அவர் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல்கள் வேறு தொகை நூல்களிலும் உள்ளன. இந்தப் பாட்டுத் திருமாலைப் பற்றியது.

மற்றப் பாடல்களில் களவுக் காதலைப் பற்றிய பாடல் கள் ஆறு (3, 4, 5, 6, 8, 9); கற்பு வாழ்க்கையைப் பற்றி யவை இரண்டு (2,7); தோழி தலைவன் காதலை எடுத்துத் தலைவிக்குச் சொல்வது ஒன்று; வீட்டுக்குப் புறம்பே பகற் காலத்தில் வந்து தலைவியைச் சந்திக்கும் தலைமகன் சில நாள் வாராமையால் வருந்தும் தலைவி சொல்வது ஒன்று; தலைவன் மணம் புரிந்து கொள்ளும் ஏற்பாட்டோடு வந்திருக்கிறான் என்று தோழி கூறுவது ஒன்று; தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு போவதாகத் திட்டம் போட்ட பிறகு தன் ஆயத்தாரைப் பிரிய முடியாமல் தலைவி வருந்துவதைத் தலைவனுக்குத் தோழி உரைப்பது ஒன்று; தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு போகையில் அவளோடு கூறுவது ஒன்று; தலைவி தலைவ னுடன் போய்விட அதனை உணர்ந்த தாய் வருந்தி உரைப் பது ஒன்று. இவை களவுத் துறைகள்.

இல்லறம் நடத்தும்போது பொருள் தேடும் பொருட்டுப் பிரிந்து செல்ல நினைத்த நெஞ்சை நோக்கித் தலைவன் கூறியதாக ஒரு பாட்டும், அவன் பொருள் ஈட்டச் செல்வதற்கு உடம்பட்ட தோழியைத் தலைவி பாராட்டிக் கூறியதாக ஒரு பாட்டும் உள்ளன. இவை கற்புக்குரிய துறைகள்.

இந்த இருவகை வாழ்க்கை நிலையிலும் உணர்ச்சி வகையினால் ஐந்து பகுதிகள் உண்டு. தலைவியும் தலைவனும் ஒன்றுபட்டு இன்பத்தில் ஆழ்வது ஒன்று; இதற்குக் குறிஞ்சித் திணை என்று பெயர். தலைவனும் தலைவியும் பிரிந்து துன்புறுதல்; இதற்குப் பாலைத் திணை என்பது பெயர். தலைவன் பிரிந்திருக்கும் காலத்தில் அவன் வருவான் என்ற நம்பிக்கையோடு தலைவி இருத்தல் முல்லைத் திணை என்ற பெயர் பெறும். தலைவன் தலைவி யைப் பிரிந்து வேறு மகளிரை நாடும்போது தலைவி ஊடல் கொள்வாள்; இது மருதத் திணை என்று பெயர் பெறும். தலைவி தலைவனை நினைந்து புலம்புதல் நெய்தல் திணை யாகும். புணர்ச்சி, பிரிவு, இருத்தல், ஊடல், இரங்கல் என்ற பெயர்களால் இந்த ஐந்து பகுதிகளையும் சுருக்க மாகச் சொல்வார்கள்.

குறிஞ்சி முதலியவை ஒழுக்க வகைகளானாலும் அவை நிகழும் நிலங்களுக்கும் அந்தப் பெயர் வழங்கும் முதலில் நிலத்திற்குப் பெயர் ஏற்பட்டுப் பிறகு அந்த நிலத்தில் நடக்கும் ஒழுக்கத்துக்குப் பெயராக வந்தது. மலையும் மலை யைச் சார்ந்த இடமும் குறிஞ்சி. இந்த நிலத்தில் புணர்த லாகிய ஒழுக்கம் சிறப்பைப் பெறும். மழையுன்றி வறண்டு போன நிலம் பாலை; பிரிவு இங்கே நிகழ்வதாகச் சொன்னால் பிரிவினது துன்ப உணர்ச்சி நன்றாக வெளிப்படும். காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை; இந்த நிலத் தில் இருத்தல் என்னும் ஒழுக்கம் நிகழ்வதாகச்சொன்னால் சிறப்பாக இருக்கும். வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம்; இது ஊடலுக்கு ஏற்ற இடம். கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல்; தனிமையிலே புலம்புதற்கு ஏற்ற இடம்.

சங்க நூல்களில் இயற்கை எழிலைப் புலவர்கள் மிக நன்றாக வருணித்திருக்கிறார்கள். விலங்கினங்களிடத்தும் காதல் வாழ்க்கை இருப்பதைப் புலப்படுத்தியிருக்கிறார் கள். இப்புத்தகத்தில் உள்ள பாடல்களில் குறிஞ்சி நிலத் தையும் பாலை நிலத்தையும் பார்க்கிறோம். குறிஞ்சி நிலத் தில் நன்னெடுங் குன்றம் ஓங்கி நிற்கிறது. காலையில் பெய்த மழையினால் அருவிபெருக்கெடுத்து வீழ்கிறது அது பாயும் காடுகள் காண்பதற்கு அரிய அழகுக் காட்சியாகத் திகழ் கின்றன.

காந்தள் மலரில் வண்டு மொய்த்து ஊதுகின்றது. அதன் இன்னிசை யாழொலியைப் போல இருக்கிறது. யாமத்தில் அடர மழை பெய்கிறது. மரங்கள் அடர்ந்து ஓங்கி நின்ற மால் வரை திருமாலைப் போலத் திகழ்கிறது. வெள்ளை வெளேரென்று வீழும் அருவி பலராமரைப் போல இருக்கிறது. குறமகளிர் தினைப்புனத்தைக் காவல் புரிகிறார்கள். அவர்களை ஏமாற்றிவிட்டு மந்தி தினைக் கதி ரைப் பறித்துக்கொண்டு தன் கணவனாகிய கடுவனோடு மலை மேலே ஏறிப் போய்த் தினைக் கதிரைக் கையால் தேய்த்துத் தின்கிறது. தன் கவுளிலும் தாடையிலும் தினையை அடக்கிக் கொள்கிறது.

எங்கே பார்த்தாலும் வெப்பம் நிரம்பி அழல் கொளுந் தும் பாலை நிலத்தைச் சில பாடல்களில் காண்கிறோம். உலர்ந்த காந்தளும் ஓய்ந்த புலியும் ஈனும் பருந்தும் அங்கே வருகின்றன. எப்போதும் கோடைக் காலம் அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டதோ என்று தோன்றுகிறது. வேப்ப மரத்தின்மேல் இலைகள் சுருங்கிச் சு ண்டுள்ளன. அதன் கீழே புள்ளி புள்ளியா த்தான் நிழல் காணப்படு கிறது. அதன் மேலே பிரசவ வேதனையோடு பருந்து தங்கி யிருக்கிறது அந்த நிழலில் மறவர்களின் சிறுவர்கள் தாயக் கட்டம் போன்ற விளையாட்டை ஆடுகிறார்கள்; நெல்லிக் காயை உருட்டி விளையாடுகிறார்கள். கருவுயிர்த்த பெண் புலி நடக்க முடியாமல் ஓரிடத்தில் இருக்க, அதற்கு இரை தேடி ஆண் புலி வழியிலே யாராவது வருகிறார்களா என்று ஒளித்துப் பார்த்து நிற்கிறது.

நெல்லி மரமும் விளாமரமும் எங்கேயோ ஓரிடத்தில் உயிர் வைத்துக்கொண்டிருக்கின்றன. இந்தப் பாலையில் பிறரைக் கொன்று வாழும் மறவர்களாகிய வில்லேருழவர் கள் வாழ்கிறார்கள்.

எங்கோ ஓரிடத்தில் கொஞ்சம் பசுமை இருக்கிறது. அங்கே விளாமரத்தின் கீழே பச்சைக் கம்பலத்தை விரித் தாற்போலப் பயிர் பரந்திருக்கிறது. அதன் மேலே விளாம் பழங்கள் பழுத்து

உதிர்ந்திருக்கின்றன. மாமரச் சோலையும் அதில் இருந்து பாடும் குயிலும் பாலை நிலத்தை அடுத்து இருக்கின்றன.

பழந்தமிழர் வாழ்க்கையில் தெய்வ பக்தி நன்றாக இருந்தது. திருமாலையும் பலராமனையும் இந்தப் புத்தகத் 'தில் வரும் செய்யுட்களில் காண்கிறோம். சக்கரபாணி யாகிய திருமால் வேத முதல்வராகவும் உலகமே உருவ மாகப் பெற்ற பெருமானாகவும் விளங்குகிறார். அவர் எப் பொருளினூடும் இருப்பவர்; எல்லாவற்றையும் தம்முள் அடக்கியவர். சர்வாந்தரியாமி; சர்வ வியாபகர். அவர் தமையனாராகிய பலதேவர் வெள்ளை நிறமுடையவர்.

பல தெய்வங்கள் இருந்தாலும் உள்ளம் கசிந்து வழி படும் தெய்வம் ஒன்று ஒவ்வொருவருக்கும் இருக்கும். அத் தெய்வத் திருவருளைப் பெறவேண்டுமென்ற ஆர்வத் தினால் சோர்வில்லாமல் அவர்கள் சாதனங்களில் ஈடுபட் டார்கள். வழிபடு தெய்வத்தைக் கண்ணாலே காணலா மென்றும், அந்தக் காட்சியின்பம் எல்லா இன்பங்களிலும் சிறந்த தென்றும் நம்பினார்கள்.

நோன்பு நோற்று நீராடி ஈரம் புலராதபடியே சென்று கையினால் பிட்சை ஏற்று உண்ணும் துறவியர் இருந்தனர்.

இல்லற வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாதது என்பதை ஆடவர் உணர்ந்திருந்தனர். பொருள் ஈட்டுவது அவர் கடமை என்பதை மகளிர் உணர்ந்து அவர்களைப் பிரிந்து சிலகாலம் இருக்கும் துன்பத்தைப் பொறுத்தார். கள். எண்ணியபடி செய்யும் துணிவுடையவர்களே சிறந்த ஆடவர்கள் என்ற எண்ணம் இருந்தது. ஒருவரோடு நட் புப் பூண வேண்டுமானால் அவர் தகுதி முதலியவற்றை முன்பே ஆராய்ந்து, ஏற்புடையவரென்றால் நண்பு செய் வதும் இல்லையானால்

செய்யாமல் இருப்பதும் பெரியோர் இயல்பு. ஒருமுறை நண்பராக்கிக் கொண்டால் பிறகு அவருடைய தகுதியை ஆராய்வது தவறு என்பது அவர் கள் கொள்கை.

இளம் பெண்கள் மணலில் விளையாடுவார்கள். கம் பலத்தை விரித்து அதன்மேல் பந்தாடுவார்கள். இல்லத் தில் மகளிர் மாலைக் காலத்தில் விளக்கேற்றுவார்கள்; விடி யற்காலத்தில் தயிர் கடைவார்கள். காலிலே சிலம்பை யும் உடம்பிலே பொன்னாலாகிய சேயிழைகளையும் அணி வார்கள். இயற்கை அழகைக் கண்டு இன்புறுவது சில மகளிர் இயல்பு.

மகளிருக்கு உயிரைவிடச் சிறந்தது நாணம். இளம் பெண்கள் தம்முடைய அன்னையாரிடத்திலும் ஆயத்தோரிடத்திலும் மிக்க அன்பு பூண்டிருப்பார்கள். இரவில் தம் அன்னையின் அணைப்பிலே இன்புற்று உறங்குவார்கள். தாய் தன் பெண்ணை வாயிலே முத்தமிட்டுக் கொள்வ துண்டு.

பொன்னை உரை கல்லில் தேய்த்துப் பார்ப்பார்கள். அந்த உரைக்கல்லுக்குக் கட்டளை என்று பெயர். தயிர்ப் பானையில் விளாம்பழத்தைப் போட்டு மூடிவைப்பார்கள். அதனால் அந்தப் பானையின் முடைநாற்றம் மாறும். யாழ் வாசித்து அந்த இசையிலே ஈடுபடும் வழக்கம் தமிழ் மக்களுக்கு உண்டு.

இந்த ஒன்பது பாடல்களிலே இத்தனை செய்திகளும் இன்னும் சில செய்திகளும் அமைந்திருக்கின்தின. நானூறு பாடல் அடங்கிய நற்றிணையில் இன்னும் பல பல செய்தி கள் உண்டு. இப்படியே எட்டுத்தொகை நூல்களிலும் உள்ள செய்திகளை ஆராய்ந்தால் பண்டைக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையைத் தெரிந்து கொள்ளலாம்.

இந்த நற்றிணையைப் பழங்காலத்தில் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்ற அரசன். உரை எழுதி அச்சிற் பதிப்பித்தவர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் என்ற பெரியார்.

சங்க நூல்களிலுள்ள பாடல்கள் இக்காலத்துத் தமிழ் மக்களுக்கு விளங்காத நடையில் இருக்கின்றன. அவற் றைத் தெளிவாக்கினால் அவற்றிலுள்ள பொருள் யாவர் மனத்தையும் கொள்ளை கொள்ளும். இந்த எண்ணத் தினால் சில அகப்பொருட் செய்யுட்களுக்குக் கதை போன்ற உருவத்தில் விளக்கம் எழுதிக் 'கலைமக' ளில் முன்பு வெளியிட்டேன். அவற்றை அன்பர்கள் படித்துப் பார்த்து மிகவும் பாராட்டினார்கள். அந்தக் கட்டுரைகளைத் தொகுத்து, 'காவியமும் ஓவியமும்' என்ற பெயரோடு ஒரு புத்தகமாக்கி விரிவான முகவுரையோடு வெளியிட்டேன். அப்பால் திருமுருகாற்றுப் படைக்கும் விளக்கம் எழுதி, 'வழிகாட்டி' என்ற பெயரோடு வெளியிட்டேன்.

இந்த இரண்டு புத்தகங்களும் தமிழர்களின் உள்ளத்துக்கு உவந்தவையாக இருக்கின்றன என்று தெரிந்து இன்ப மடைகிறேன். முருகன் திருவருளும் என் ஆசிரியப்பிரா னுடைய ஆசியுமே இந்தச் செயலில் யான் புகுவதற்கு மூலகாரணமாக நிற்பவை.

இதே முறையில் இன்னும் பல் பாடல்களுக்கு விளக்கம் எழுதலாமென்று எண்ணினேன். என் கருத்தை அறிந்து, அப்படிச் செய்வது மிகவும் நன்றென்றும், நான் அதைச் சிறிதும் சோர்வின்றி நன்றாகச் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தி, இவை புத்தக உருவத்தில் வருவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்து, என்னைத் தூண்டி நிற்பவர் என உழுவலன்பினரும், அமுத நிலையத் தின் தலைவரும் ஆகிய ஸ்ரீ ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள். இயல்பிலே சோம்பலை

அணியாகப் பூண்ட நான் அவர் களுடைய ஊக்கம் இல்லையானால் இதை எழுத முற்பட் டிருக்க மாட்டேன். ஆகவே அவர்களுக்கு என் நன்றி யைத் தெரிவிப்பது என் தலையாய கடமை.

இந்த முயற்சி நன்கு நிறைவேறுவதற்கு முருகன் திருவருளும் தமிழ் அன்பர்களின் ஆதரவும் இன்றியமையாதவை. அவை கிடைக்கும் என்ற நம்பிக்கையே 'மனைவிளக்' கை முதல் முதலில் ஏற்றச் செய்தது.

கார்த்திகைத் திருநாள்,
12-12-1951
கி.வா.ஜகந்நாதன்.

குறிப்பு: சங்கநூற் காட்சிகளுக்குத் தமிழுலகம் அளித்த ஆதரவினால் இப்போது இதன் இரண்டாம் பதிப்பு வெளியாகிறது. இப்பதில் பின்னும் இரண்டு பாடல்களுக்குரிய விளக்கத்தைச் சேர்த்திருக்கிறேன்.

கல்யாணபுரம், மயிலாப்பூர்,
9-2-1955
கி.வா.ஜகந்நாதன்.

(😊)(😊) @@@@@@@@@@ (😊)(😊)

"நாடோடி இலக்கியம்"

கி.வா. ஜகந்நாதன் (கி.வா.ஜ) நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் வாய்மொழி இலக்கியங்களை **"நாடோடி இலக்கியம்"** என்று வகைப்படுத்தி, அதன் தனித்துவத்தையும் அழகையும் வெளிப்படுத்திய தமிழ் அறிஞர். 1967-ல் அமுத நிலையம் வெளியிட்ட அவரது "நாடோடி இலக்கியம்" நூல், செவிவழியாகப் பரவி நிலையான இடமின்றி அலைந்து திரியும் நாட்டார் பாடல்களைப் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பாகும்.

[கி.வா. ஜகந்நாதனின் நாடோடி இலக்கியம் - முக்கிய அம்சங்கள்]:

- **நாடோடி இலக்கியம் என்றால் என்ன?** பாடல்கள், பழமொழிகள், கதைகள் என நிலையான வடிவம் இல்லாது செவி வழியாகத் தொடர்ந்து பரவி வரும் நாட்டுப்புற இலக்கியங்களை அவர் நாடோடி இலக்கியம் என்று அழைத்தார்.
- **படைப்பின் பின்னணி**: சங்க இலக்கியங்கள் மற்றும் பக்தி இலக்கியங்களில் ஆழ்ந்த அறிவுக் கொண்ட கி.வா.ஜ, நாட்டுப்புற இலக்கியங்களின் எளிய அழகை உணர்ந்து, அவற்றைச் சேகரித்து, ஆராய்ந்து பதிப்பித்தார்.
- **நூலின் சிறப்பு**: "நாடோடி இலக்கியம்" நூலில் நாட்டுப்புறப் பாடல்களின் கருப்பொருள், நடை, உணர்ச்சி மற்றும் சமூகப் பின்னணியை அவர் சிறப்பாக விளக்கியுள்ளார்.
- **[பணி]**: அவர் ஏறத்தாழ 22,000 தமிழ் பழமொழிகளைச் சேகரித்துள்ளார்.
- **[முக்கிய நூல்கள்]**: நாடோடி இலக்கியம் தவிர, தமிழக நாட்டுப்புறப் பாடல்கள், திருமணமாக பாடல்கள், தெய்வப் பாடல்கள், மற்றும் தமிழகப் பழமொழிகள் ஆகியவை அவரது குறிப்பிடத்தக்க நாட்டுப்புறவியல் பங்களிப்புகளாகும்.

உ.வே. சாமிநாதையர் செவ்விலக்கியங்களுக்கு ஆற்றிய தொண்டினைப் போன்று, நாட்டுப்புற இலக்கியங்களுக்குக் கி.வா.ஜ தொண்டாற்றினார்.

chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.tamilvu.org/library/nationalized/pdf/92-ki.va.ja/nadodi_illaikkiyum.pdf

நாட்டாரியல்

கி.வா. ஜகந்நாதன் தமிழில் நாட்டாரியலின் முன்னோடிகளில் ஒருவராக கருதப்படுகிறார். இந்தியாவெங்கும் அலைந்து நாட்டாரிலக்கியத்தை சேகரித்த தேவேந்திர சத்யார்த்தி என்னும் ஆய்வாளரை சந்தித்தபின் அப்பணியை தானும் செய்ய கி.வா. ஜகந்நாதன் ஆர்வம் கொண்டார். தானும் ஊர் ஊராகச் சென்று நாட்டார் பாடல்கள், பழமொழிகள் ஆகியவற்றை சேகரித்து தொகுத்தார். தமிழில் நாட்டாரிலக்கியம் முறையாக

தொகுக்கப்பட்டு அச்சில் வருவது முதல்முறையாக அவரினூடாகவே நிகழ்ந்தது. தன் தெய்வப்பாடல்கள் முன்னுரையில் 'பெரும்பாலும் பெண்களே இப்பாடல்களை பாடுகிறார்கள். நாம் பாடச்சொன்னால் பாடமாட்டார்கள். நாமே பாட ஆரம்பித்தால் நாணத்தைவிட்டு கூடவே பாடுவார்கள். இந்த தந்திரத்தை பயன்படுத்தித்தான் அவர்களிடமிருந்து இப்பாடல்களை வருவித்தேன்' என்று கி.வா. ஜகந்நாதன் குறிப்பிடுகிறார்.



கி.வா. ஜகந்நாதன் நாட்டார் இலக்கியங்களை நாடோடி இலக்கியம் என்று குறிப்பிடுகிறார். அவை நிலையான ஊரோ இடமோ அற்றவை, செவிவழியாக பரவுபவை என்னும் பொருளில். செவ்விலக்கியங்கள் மேல் கவனம் குவிந்திருந்த தமிழ் மறுமலர்ச்சிக் காலகட்டத்தில் மரபிலக்கிய அறிஞரான அவர் நாட்டாரியலில் ஈடுபட்டது ஓர் அரிய நிகழ்வு. செவ்விலக்கியத்திற்கு உ.வே. சாமிநாதய்யர் செய்ததை தமிழக நாட்டாரியலுக்கு கி.வா. ஜகந்நாதன் செய்தார். அவர் அவற்றை சேகரித்த காலமும் குறிப்பிடத்தக்கது. மரபான கல்வியும் கிராமவாழ்க்கையும் அழிந்து நவீனக்கல்வியும் நகரம் நோக்கிய இடப்பெயர்வும் தொடங்கிய சூழல் அது. அக்காலகட்டத்தில் அவர் முயற்சி எடுத்திருக்காவிடில் நாட்டாரியலில் ஒரு பகுதி அழிந்து விட்டிருக்க வாய்ப்புண்டு. நாடோடி இலக்கியம், தமிழக நாட்டுப்புறப் பாடல்கள், திருமணப்பாடல்கள், தெய்வப்பாடல்கள், தமிழகத்துப் பழமொழிகள் ஆகியவை அவருடைய முக்கியமான நூல்கள். இருபத்திரண்டாயிரம் தமிழ்ப் பழமொழிகளை கி.வா. ஜகந்நாதன் சேகரித்திருக்கிறார்.





சுதேசமித்திரன் வாரப்பதிப்பு 13

நாடோடிப் பாட்டுக்கள்

தவளையின் புலம்பல்

கி. வா. ஜகந்நாதன்





https://keetru.com/index.php/2018-01-12-06-00-39/2009-10-06-14-40-17/2009-10-06-14-44-06/17791-2011-12-14-06-30-07

கி.வா.ஜா.

காயத்ரி

பிரிவு: பொது

வெளியிடப்பட்டது: 13 டிசம்பர் 2011

கி.வா.ஜ என்றழைக்கப்பட்ட கி.வா.ஜகந்நாதன் (ஏப்ரல் 11, 1906 - நவம்பர் 4, 1988) குறிப்பிடத்தக்க தமிழ் இதழாளர், கவிஞர், எழுத்தாளர் மற்றும் சமயச்சொற்பொழிவாளர். இவர் தமிழ் தாத்தா உ.வே.சாமிநாதய்யரின் மாணாக்கராவார். இவர் "கலைமகள்" என்ற இலக்கிய இதழை நடத்தி, பல புதிய படைப்பாளிகளை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தினார். 1967இல் இவரது "வீரர் உலகம்" என்னும் இலக்கிய விமர்சன படைப்பிற்கு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது. கம்பன் கழகம் இவரது நினைவாக கி.வா.ஜ பரிசை நிறுவி வழங்கி வருகிறது. இவரின் பல நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளது. இவர் சொல்லின் செல்வராக திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல் சிலேடை புலியாகவும் இருந்தார் என்பதற்கு சாட்சி "சிரிக்க வைக்கிறார் கி.வா.ஜ" என்ற புத்தகம். இது, வாகீச கலாநிதி திரு.கி.வா.ஜகன்னாதன் அவர்களின் வாழ்வில் நடைபெற்ற வேடிக்கை நிகழ்ச்சிகளின் தொகுப்பு. நிகழ்ச்சிகள் மட்டுமன்றி, சில சிலேடைக்கவிதைகளையும் உள்ளடக்கியது. அவற்றிலிருந்து சில சுவையான நிகழ்ச்சிகள் இதோ உங்களுக்காக:

1. புடவையின் சிறப்பு...

ஒரு நண்பர் வீட்டிற்குக் கி.வா.ஜ. சென்றார். நண்பர் அடுக்குமாடியில் குடியிருந்தார். புடவை உலர்த்துவதற்கு வெய்யில் படுகிற வகையில் வசதியான இடம் அந்த வீட்டில் இருக்கவில்லை.

வாசல் பக்கத்தில்தான் வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது. நண்பரின் மனைவி வாசல் கதவைத் திறந்து வைத்து வெய்யில் படும்படியாகத் துவைத்த புடவையை அதன் மேல் காயப் போட்டிருந்தார். புடவையைப் பார்த்துக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்த கி.வா.ஜ.,

'இது என்ன புடவை தெரியுமா?' என்று நண்பரைக் கேட்டார்.

'ஏன் சாதாரணப் புடவைதானே?' என்றார் நண்பர்.

'அல்ல இந்தப் புடவைக்கு ஒரு விசேஷச் சிறப்பு உண்டு. இதுதான் உண்மையான வாயில் புடவை!' என்றார் கி.வா.ஜ.

2. வெளுத்துக்கட்டிவிட்டீர்கள்

சென்னையில் குமரி அனந்தனும், கி.வா.ஜ.வும் கலந்து கொண்ட ஒரு கூட்டம். முதலில் பிரமாதமாகப் பேசிவிட்டு அமர்ந்தார் குமரி அனந்தன். பலத்த கைதட்டல். அடுத்து பேச வந்தார் கி.வா.ஜ.

“குமரி அனந்தன் அருமையாகப் பேசினார்” என்று பாராட்டிவிட்டு, அவரிடம் “நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?” என்று கேட்டார்.

“வண்ணாரப்பேட்டையிலிருந்து” என்றார் அவர். உடனே சொன்னார் கி.வா.ஜ.

“அதான் இப்படி வெளுத்துக்கட்டிவிட்டீர்கள்” சபையில் கைதட்டல் அடங்க வெகுநேரமாயிற்று!

3. உப்புமா குத்துகிறதா

*குழந்தைக்கு அதன் அம்மா உப்புமா ஊட்டிக் கொண்டிருந்தார். ஏதனாலோ அந்தப் பழைய உப்புமா குழந்தைக்குப் பிடிக்கவில்லை. அருகில் இருந்தார் கி.வா.ஜ.

'உப்புமாவைத் தின்ன' முடியலையோ! உப்புமா ஏன் தொண்டையைக் குத்துகிறதா'' என குழந்தையைக் கோபித்துக் கொண்டார் அந்தப் பெண்மணி.

கி.வா.ஜ. அந்தப் பழைய உப்புமாவை வாங்கி வாயில் போட்டுக்கொண்டு பார்த்தார். பிறகு, "ஆமாம். இந்த உப்புமா தொண்டையைக் குத்தத்தான் செய்யும்" என்றார்.

ஏன் என்று அந்த அம்மா கேட்டார். 'ஊசி இருக்கிறது' என்று கூறிச் சிரித்தார் கி.வா.ஜ.!

4. இம்மை - மறுமை

கி.வா.ஜ அவர்கள் ஒரு கூட்டத்தில் இம்மை - மறுமை என்ற தலைப்பில் பேச அழைக்கப்பட்டிருந்தார். அவர் உரையாற்ற ஆரம்பித்ததும் மைக் கோளாறாகி விட்டது. அதை அகற்றி விட்டு வேறு மைக் வைத்தார்கள். அதுவும் கொஞ்ச நேரத்தில் சரியாகச் செயல்படவில்லை. கி.வா.ஜ உடனே"இம்மைக்கும் சரியில்லை, அம்மைக்கும் சரியில்லை" என பேசவிருந்த தலைப்பிற்கு ஏற்றவாறு சிலேடையில் சொல்ல அனைவரும் ரசித்தனர்.

5. தலைவனை பையனாக...?

கி.வா.ஜவை ஒரு ஊரில் நடந்த கூட்டம் ஒன்றிற்கு தலைமை தாங்க அழைத்திருந்தனர். கி.வா.ஜ அவர்கள் சிறப்பாக கூட்டத்தை நடத்திக் கொடுத்தார்.

கூட்டம் முடிந்த பின் கொஞ்சம் பழங்களையும், பிஸ்கட்டுகளையும் ஒரு பையில் போட்டு அவரிடம் கொடுத்தனர்.

அந்தப் பையைப் பெற்றுக் கொண்ட கி.வா.ஜ அவர்கள் "என்னைத் 'தலைவனாக'த் தலைமை தாங்க அழைத்துப் 'பையனாக" அனுப்புகிறீர்களே?" என்றார். அவரின் சிலேடை நகைச்சுவையை அனைவரும் ரசித்தனர்.

6. நானா தள்ளாதவன்...?

கி.வா.ஜவும் வேறு சில நண்பர்களும் காரில் போய்க் கொண்டிருந்தார்கள். கார் வழியில் நின்று விட்டது.

கி.வா.ஜ முதியவர் என்பதால் அவரை மட்டும் காரிலேயே உட்காரச் சொல்லிவிட்டு காரைத் தள்ளினார்கள் மற்றவர்கள்.

ஆனால், அதை ஏற்காமல் தாமும் கீழே இறங்கிக் காரைத் தள்ளியவாறே கி.வா.ஜ. சொன்னது;

"என்னைத் தள்ளாதவன் என்றே நினைத்து விட்டீர்களா?" என்று கேட்டார்.

7. வாயிலில் போடுவேன்..!

கி.வா.ஜ. விடம் ஒருவர், "சாப்பிட்ட பிறகு வெற்றிலை போடும் பழக்கம் தங்களுக்கு உண்டா?" என்று கேட்டார்.

அதற்கு, "ஓ...! உண்டே....! ஆனால் வெற்றிலையை வாயில் போட மாட்டேன். வாயிலில் போடுவேன்" என்றார்.

அங்கிருந்த அனைவரும் அவர் சொன்னது தெரியாமல் விழித்தனர்.

கி.வா.ஜ. சாப்பிட்ட பிறகு வெற்றிலையை அதாவது வெறும் இலையை வாயிலில் உள்ள குப்பைத் தொட்டியில்தானே போட வேண்டும்?" என்று கூறி அனைவரையும் சிரிக்க வைத்தார்.

8. உள்ளே வெளியே

கி.வா.ஜா தலைமையில் அந்தக் காலத்தில் ஒரு இலக்கியக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் விவாதம் வலுத்து பெரிய சண்டையில் கொண்டு போய் விட்டது. சிறிது நேரத்தில் சண்டையும் வலுத்து ஒருவருக்கொருவர் திட்டிகொள்ள தொடங்கினர். கி.வா.ஜ எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. சிறிது நேரத்தில் பொறுமை இழந்த கி.வா.ஜ கூட்டத்தை விட்டு எழுந்து வெளியே வந்துவிட்டார். வெளியே மழை பெய்துகொண்டிருந்தது.

அப்பொழுது அவர் சொன்னார் "உள்ளேயும் தூற்றல் வெளியேயும் தூற்றல்".

9. நாற்காலி மனிதன்

"ஒரு முறை கூட்டத்துக்குத் தலைமை தாங்க இருந்தவர் வரவில்லை.கி.வா.ஜ அவர்களைத் தலைமைத் தாங்கச் சொன்னார்கள்.கி.வா.ஜ மறுத்தார்."நீங்களே தலைவராக அமரவேண்டும்" என்றார்கள் அன்பர்கள்."இரண்டு கால் மனிதனை நாற்காலி மனிதன் ஆக்க உங்களுக்கு ஏன் அவ்வளவு ஆசை" என்று கேட்டார் கி.வா.ஜ.

10. தொண்டை கட்டு

தமிழ்த் தாத்தா உ.வே.சாமி நாத ஐயரிடம் கி.வா.ஜகந்நாதன் மாணவராக இருந்த நேரம்.. ஒருமுறை கி.வா.ஜ.வை ஒரு பாட்டுப் பாடு என்றார் உ.வே.சா.

அப்போது கி.வா.ஜ.வுக்குத் தொண்டை கட்டியிருந்தது. கி.வா.ஜ. செய்த தமிழ்த் தொண்டைப் பாராட்டலாமே தவிர அவரது தொண்டை அன்று பாராட்டும்படியாக இருக்கவில்லை.

'என் தொண்டை கம்மலாக இருக்கிறது. இன்று போய் என்னைப் பாடச் சொல்கிறீர்களே' என்று தயங்கினார் கி.வா.ஜ. 'அதனால் என்ன பரவாயில்லை. காதால் தானே கேட்கப் போகிறோம். கம்மல் காதுக்கு அழகுதான் பாடு' என்றார் உ.வே.சா!

(☺)(☺)(☺) @@@@@@ (☺)(☺)(☺)

"வீரர் உலகம்"

கி வா ஜகந்நாதன்

chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0577.pdf

https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZpdkJxy.TVA_BOK_0002162

chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.tamilvu.org/library/nationalized/pdf/92-ki.va.ja/verarulagam.pdf

கி. வா. ஜகன்னாதன் எழுதிய 'வீரர் உலகம்' (1966) சங்க இலக்கியத்தில் காணப்படும் தமிழர் வீர வாழ்வை விளக்கிக் காட்டும் ஒரு சிறந்த இலக்கிய விமர்சன நூல். இந்த நூலுக்காக அவருக்கு 1967-ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. இந்நூல் சங்க கால மக்களின் வீரம், போர் முறைகள் மற்றும் அற உணர்வுகளைப் பாடல்கள் வழி ஆராய்கிறது.

வீரர் உலகம் - முக்கிய குறிப்புகள்:

- **ஆசிரியர்:** கி. வா. ஜகன்னாதன் (கலைமகள் இதழ் ஆசிரியர் மற்றும் உ.வே.சா அவர்களின் மாணவர்).
- **பொருள்:** சங்க இலக்கியங்களில் (புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு போன்றவை) காணப்படும் வீரம், போர், கொடை மற்றும் தியாகம் போன்ற புறப்பொருள் அம்சங்களின் திறனாய்வு.
- **சிறப்பு:** தமிழர் தம் வீர வாழ்வினை விளக்கிக் காட்டும் கட்டுரைகளின் தொகுப்பு.
- **விருது:** 1967-ல் சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல்.
- **பதிப்பகம்:** மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

சங்க காலத் தமிழரின் பண்பாட்டு மற்றும் வீர மரபுகளைப் புரிந்துகொள்ள இந்த நூல் ஒரு முக்கிய ஆவணமாகக் கருதப்படுகிறது.

Sahitya Academy Awards

TAMIL

https://sahitya-akademi.gov.in/awards/akademi%20samman_suchi.jsp#TAMIL

YEAR	BOOK	AUTHOR
2025	Thamiz Sirukathaiyin Thadangal (Literary Criticism)	Sa.Tamilselvan
2024	Tirunelveeli Ezucciyum Vaa. Vuu.ci. Yum 1908 (Research)	A.R. Venkatachalapathy
2023	Neervazhi Paduvum (Novel)	Rajasekaran (Devibharathi)
2022	Kaala Paani (Novel)	M. Rajendran
2021	Civappuk Kazuttu Tan Oru Paccaip Paravai (Short Stories)	Ambai
2020	Sellaatha Panam (Novel)	Imaiyam

2019	Sool (Novel)	Cho. Dharman
2018	Sanchaaram (Novel)	S. Ramakrishnan
2017	Kaandhal Naatkal (Poetry)	(Late) Inqulab
2016	Oru Siru Isai (Short Stories)	Vannadhasan
2015	Ilakkiya Suvadugal (Essays)	A. Madhavan
2014	Agngnaadi (Novel)	Poomani
2013	Korkai (Novel)	R.N. Joe D' Cruz
2012	Thol (Novel)	D. Selvaraj
2011	Kaval Kottam (Novel)	S. Venkatesan
2010	Soodiya Poo Soodarka (Short Stories)	Nanjil Nadan
2009	Kaiyappam (Poetry)	Puviyarasu
2008	Minsarapoo (Short Stories)	Melanmai Ponnusamy
2007	Ilai Uthir Kaalam (Novel)	Neela Padmanabhan
2006	Akayathukku Aduthaveedu (Poetry)	Mu Metha
2005	Kalmaram (Novel)	G. Thilakavathi
2004	Vanakkam Valluva (Poetry)	Tamilanban
2003	Kallikattu Ithikasam (Novel)	R. Vairamuthu
2002	Oru Giraamattu Nadi (Poems)	Sirpi Balasubramaniam
2001	Sutanthira Daagam (Novel)	*C.S. Chellappa
2000	Vimarsanangal Mathi Puraikal Pettikal (3 Parts) (Criticism)	Thi.Ka. Sivasankaran
1999	Aalapanai (Poetry)	S. Abdul Rahman
1998	Visaranai Commission (Novel)	Sa. Kandasamy
1997	Chaivu Narkali (Novel)	Thoppil Mohamed Miran
1996	Appavin Snehidar (Short Stories)	Ashokamitran
1995	Vaanam Vasappadum (Novel)	Prapanchan
1994	Pudhiya Dharisanangal (Novel)	Ponneelan (Kandeswara Bhaktavalsalan)
1993	Kathukal (Novel)	M.V. Venkataram
1992	Kutralakurinji (Historic Novel)	Kove. Manisekaran
1991	Gopallapurarthu Makkal (Novel)	Ki. Rajanarayanan
1990	Veril Pazhutha Pala (Novel)	Su. Samuthiram
1989	Chintanadi (Autobiographical Essays)	L.S. Ramamirtham
1988	Vazhum Valluvam (Literary Criticism)	V.C. Kulandaiswamy
1987	Mudalil Iravu Varum (Short Stories)	*Aadhavan Sundaram
1986	Ilakkiyathukku Oru Iyakkam (Literary Criticism)	Ka. Naa. Subramanyam

1985	Kamban: Putiya Parvai (Literary Criticism)	A.S. Gnanasambandan
1984	Oru Kaveriyai Pola (Novel)	Thirupurasundari ‘Lakshmi’
1983	Bharathi: Kalamum Karuthum (Literary Criticism)	T.M.C. Raghunathan
1982	Manikkodikalam (Literary History)	B.S. Ramaiya
1981	Puthiya Urai Nadai (Literary Criticism)	M. Ramalingam
1980	Cheraman Kadali (Novel)	Kannadasan
1979	Sakthi-Vaithiyam (Short Stories)	T. Janakiraman
1978	Pudukavkhaiyin Thottramum Valarchiyum (Literary Criticism)	Vallikannan
1977	Kuruthi-P-Punal (Novel)	Indira Parthasarathi
1975	Tharkkala Tamizh Illakkiyam (Literary Criticism)	R. Dhandayudham
1974	Thirukkural Nedhi Illakkiyam (Literary Criticism)	K.D. Thirunavukkarasu
1973	Verukku Neer (Novel)	Rajam Krishnan
1972	Sila Nerangalil Sila Manithargal (Novel)	D. Jayakanthan
1971	Samudaya Veedhi (Novel)	Naa. Parthasarathy
1970	Anbalippu (Short Stories)	*G. Alagirisami
1969	Pisirantaiyar (Play)	*Bharatidasan
1968	Vellai Paravai (Poetry)	A. Srinivasa Raghavan
1967	Virar Ulagam (Literary Criticism)	K.V. Jagannathan
1966	Vallalar Kanda Orumaippadu (Biography)	M.P. Sivagnanam
1965	Sri Ramanujar (Biography)	P. Sri Acharya
1963	Vengaiyin Maindhan (Novel)	‘Akilon’ (P. V. Akilandam)
1962	Akkarai Cheemaiyil (Travelogue)	Somu (Mi. Pa. Somasundaram)
1961	Agal Vilakku (Novel)	Mu. Varadarajan
1958	Chakravarti Tirumagan (Ramayana retold in Prose)	C. Rajagopalachari
1956	Alai Osai (Novel)	*R. Krishnamurti 'Kalki'
1955	Tamil Inbam (Essays)	R.P. Sethu Pillai

வீரர் உலகம்


பதிப்பகத்தார் உரை

தமிழ் நாட்டின் புகழ் பெற்ற எழுத்தாளர்களுள் திரு கி. வா. ஜகன்னாதன் அவர்களும் ஒருவர் என்பதனை நாடு நன்கறியும். நல்ல நூல்கள் நூற்றுக்குமேல் எழுதிய நல்லாசிரியர். அறிஞர் நூல்களுக்கு முதன்மை கொடுத்து வெளியிட வேண்டும் எனும் நோக்கத்திற்கு ஏற்ப முன்பு கவி பாடலாம் எனும் நூலை வெளியிட்டோம். இப்பொழுது தமிழர் தம் வீர வாழ்வினை விளக்கிக் காட்டும் வீரம் உலகம் வெளியிடுகிறோம். தொடர்ந்து தேவாரம் பாடிய மூவர் பற்றி மூன்று நூல்கள் வெளியிட இருக்கின்றோம் என்பதனையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வீரத்தின் விளை நிலமாம் தமிழகத்தின் பொற்கால வாழ்வினை ஆசிரியர் தமக்கே உரிய அழகான நடையில் விளக்குகிறார். தொல்காப்பியம் தொடங்கி இலக்கிய இலக்கணங்களில் புதைக்து சிக்கும் தமிழ்: பேராற்றலை — பேராண்மையை வெளிக் கொணர்ந்துள்ளார். கற்றதுணர விரித்துரைக்கும் ஆசிரியர் தமிழமுதாம் காவியத்தை வாரி வழங்குகிறார். ஆழ்ந்து கற்றும் பழந்தமிழ்ப் புலர் பண்பும், பொருளில் அழகு காணும் புதிய திறனாய்வுப் பண்பும் நூல் முழுதும் மிளிரக் காண்கிறோம், மரபுவழிப் புலமையின் ஆழமும், புதிய அறிவின் ஒளியும் நாலுக்குச் சிறப்பு நல்குகின்றன. பேச்சு, எழுத்து ஆகிய இத்துறையிலும் வல்ல ஆசிரியர் தற்போர் உள்ளம் கொள்ளுமாறு கருத்தினைத் தொகுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.

எங்கள்பால் அன்புமிக்க ஆசிரியர் அவர்கட்கும், நூல் வெளியீட்டுத் துறையில் கற்கருத்துக்களே கல்கிப் பொலிவோடு புதிய தமிழ் நூல்கள் வெளிவரத் துணை செய்யும் திரு ச. மெய்யப்பன் எம். ஏ., அவர்கட்கும் எம் நன்றி என்றும் உரியது.

சிதம்பரம்
1—11—66 }



[சிலிகான் ஷெல்ஃப்](https://siliconshelf.wordpress.com/2019/06/16/%E0%AE%95%E0%AE%BF-%E0%AE%B5%E0%AE%BE-%E0%AE%9C%E0%AE%95%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D/)

https://siliconshelf.wordpress.com/2019/06/16/%E0%AE%95%E0%AE%BF-%E0%AE%B5%E0%AE%BE-%E0%AE%9C%E0%AE%95%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D/

தமிழறிஞர் வரிசை

கி.வா. ஜகன்னாதன்

RV Tamil Scholars 16 ஜூன் 2019 1 Minute



கி.வா.ஜ. **உ.வே.சாமிநாதய்யரின்** அணுக்க சீடர். சம்பிரதாயமான தமிழ் பண்டிதர். சிலேடையாகப் பேசுவதில் வல்லவராம். '**சிரிக்க வைக்கிறார் கி.வா.ஜ.**', '**கி.வா.ஜ. சிலேடைகள்**' என்று அவரது சிலேடைப் பேச்சை புத்தகமாகவே போட்டிருக்கிறார்கள். **கலைமகள்** ஆசிரியராக வெகு நாள் இருந்தவர். **வீரர் உலகம்** என்ற புத்தகத்துக்காக சாஹித்ய அகாடமி விருது பெற்றிருக்கிறார். அவரது புத்தகங்கள் பொதுவாக ஏதாவது சங்கக் கவிதை விளக்கமாகவோ, அல்லது முருகன் துதி விளக்கமாகவோ இருக்கும். சம்பிரதாயமான இலக்கிய விளக்கம் எல்லாம் நமக்கு கொஞ்சம் தூரம், ஜெயமோகன் மாதிரி ஆள்தான் சரிப்பட்டு வருகிறது. அவரை மறந்துவிடுவார்கள் என்றே நினைக்கிறேன்.

கி.வா.ஜ.வின் சொந்த வாழ்க்கை அன்றைய தமிழ் பண்டிதர்களின் வாழ்க்கைக்கு ஒரு ஜன்னல். ஏழை பிராமணக் குடும்பம். சிறு வயதில் தமிழார்வம், பக்தி. பள்ளிப் படிப்பு முடிக்கவில்லை. கவிதை எழுத வந்தது. கிராம மிராசுதார்களின் தயவில் 20-25 வயது வரை வாழ்க்கை. கிராமத்து குழந்தைகளுக்கு படிப்பு சொல்லிக் கொடுத்து, சொற்பொழிவுகள் ஆற்றி, நாலு பெரிய மனிதர்களை புகழ்ந்து கவி பாடி, வெள்ளைக்காரரர் ஒருவருக்கு தமிழ் கற்றுக் கொடுத்து, ஐந்தும் பத்தும் சம்பாதிக்க வாழ்க்கை ஓட இருக்கிறது. உ.வே.சா.விடம் சேர வேண்டும்

என்று ஆசை. உ.வே.சா.வும் பெரும் பணக்காரர் அல்லர். அவர் என்னிடம் பாடம் கற்றுக் கொள்ளலாம், ஆனால் நிலைத்து இருக்க வேண்டும், உன் செலவுக்கு நீதான் பொறுப்பு என்று சொல்லி இருக்கிறார். சேர்த்து வைத்திருந்த பணத்தை வைத்து கொஞ்ச நாள் ஓட்டி இருக்கிறார். பிறகு மீண்டும் பெரிய மனிதர்கள் அவ்வப்போது உதவுவது. உ.வே.சா. ஒரு கட்டத்தில் இவருக்கு மாத சம்பளம் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார். விகடன் உட்பட்ட சில இடங்களில் வேலைக்கு கூப்பிட்டிருக்கிறார்கள், ஆனால் இவருக்கு குருபக்தி அதிகம், உ.வே.சா.வை விட்டு போக மறுத்திருக்கிறார். கலைமகளில் பகுதி நேர வேலை, நினைத்தபோது வரலாம், போகலாம் என்றதும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். பிறகு கலைமகள் ஆசிரியராகி, பேச்சாளராகி…

கி.வா.ஜ. மந்தவெளியில் வாழ்ந்தவர். நான் சிறுவனாக இருந்தபோது ஒரு முறை அவர் வீட்டுக்குப் போயிருக்கிறேன். கட்டை குட்டையாக இருப்பார். அப்போதெல்லாம் கந்தர் அனுபூதி, கந்தரலங்காரம் ஆகியவற்றைப் பற்றி சொற்பொழிவுகள் பிரபலமாக இருந்தன. கந்தரலங்காரம் பற்றிய சொற்பொழிவுத் தொகுப்பு – **தனி வீடு** – ஒன்றை நாஸ்டால்ஜியாவுக்காக புரட்டிப் பார்த்தேன். இனி மேல் படிக்க முடியாது என்று நினைக்கிறேன்.

அவரது சில புத்தகங்களை கொஞ்சம் தம் கட்டிப் பிடித்தேன். அவற்றைப் பற்றி:

புது மெருகு: பல தொன்மக் கதைகள் – எல்லாம் புலவர்கள் பற்றியது. தொல்காப்பியரிலிருந்து ஆரம்பிக்கிறது. எனக்குப் பிடித்திருந்தது.

தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்: கி.வா.ஜ.வுக்கு கல்கியே தமிழ் நாவலின் உச்சம். அவரது கருத்துகளை இன்றைக்கு பொருட்படுத்த வேண்டியதில்லைதான், ஆனால் ஓரளவு ஆவண முக்கியத்துவம் உள்ள புத்தகம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளியான பல தமிழ் நாவல்களைப் பற்றி கொஞ்சம் விவரம் கிடைக்கிறது.

தமிழ் நூல் அறிமுகம் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைப் பற்றி சிறிய, படிக்கக் கூடிய அறிமுகங்களைத் தருகிறது

தமிழ்த் தாத்தா: உ.வே.சா.வைப் பற்றிய சம்பிரதாயமான வாழ்க்கை வரலாறு. இதை விட உ.வே.சா.வின் சுயசரிதையையே படித்துக் கொள்ளலாம்.

என் ஆசிரியப்பிரான்: உ.வே.சா.வைப் பற்றிய துதி நூல் என்றே சொல்லலாம். கி.வா.ஜ.வைப் பற்றியும் குறை சொல்வதற்கில்லை, உ.வே.சா. அவருக்கு ஏறக்குறைய தெய்வம்தான். ஆனால் உபயோகமான தகவல்கள் எதுவும் இல்லை, உ.வே.சா.வை யார் பாராட்டினார்கள், என்ன சொன்னார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை.

வாருங்கள் பார்க்கலாம்: பாடல் பெற்ற சிவஸ்தலங்களை சுற்றிப் பார்த்திருக்கிறார். சீர்காழி, வைத்தீஸ்வரன்கோவில், திருவாரூர், திருவெண்ணெய்நல்லூர், திருவதிகை என்று பல ஸ்தலங்கள். எனக்கும் இப்படி கோவில் கோவிலாக சுற்ற வேண்டும் என்று இப்போதெல்லாம் ஒரு ஆசை இருக்கிறது. ஜெயமோகனால் வந்த வினை. அதே போல இலங்கை பயண அனுபவங்களை **கதிர்காம யாத்திரை** என்று ஒரு புத்தகமாக எழுதி இருக்கிறார்.

அறப்போர், காவியமும் ஓவியமும், எல்லாம் தமிழ், மனை விளக்கு, அதியமான் நெடுமான் அஞ்சி, இன்பமலை, கன்னித்தமிழ், புது வெள்ளம், தமிழின் வெற்றி போன்றவை சங்கப் பாடல்களின் விளக்கங்கள் மற்றும் புலவர்கள் பற்றிய குறிப்புகள். என் கண்ணில் இவற்றுக்கான தேவை இன்னமும் இருக்கிறது. ஆனால் அவரது விளக்கங்கள் சம்பிரதாயமானவையே. கோனார் நோட்சை சுவாரசியமாக எழுதும் முயற்சி, அவ்வளவுதான். ஆனால் **வாழும் தமிழ்** என்ற புத்தகத்தை குறிப்பிட்டு சொல்ல வேண்டும். தொல்காப்பியத்துக்கு – அது கூட இல்லை, அதில் சில பகுதிகளுக்கு – நல்ல அறிமுகம்.

கரிகால் வளவன் என்ற புத்தகத்தையும் குறிப்பிட வேண்டும். இலக்கிய ஆதாரங்களைக் கொண்டு கரிகாலனின் வாழ்க்கையை விவரிக்கிறார்.

நாயன்மார் கதை போன்றவை முக்கியமானவை. பெரிய புராணத்தை சுருக்கமாக தரும் முயற்சி.

சகலகலாவல்லி போன்ற புத்தகங்கள் முக்கியமானவை. **குமரகுருபரர்** இயற்றிய செய்யுள்களை விளக்கி

இருக்கிறார். இவர் போன்றவர்கள் இல்லாவிட்டால் இப்படி ஒரு பாடல் இருப்பதே நமக்கெல்லாம் தெரியப் போவதில்லை.

ஒரு சாண் வயிறு, நல்ல சேனாபதி போன்ற புத்தகங்களின் முக்கியத்துவம் கவிதைகள் நம் ரேடாரில் பட வைக்கிறது என்பதுதான். இவையெல்லாம் முக்கியமான பங்களிப்பு என்பது வயதாக வயதாகத்தான் தெரிகிறது.

பாராட்ட வேண்டிய இன்னொரு விஷயம் – செவ்வியல் இலக்கியங்களோடு நின்றுவிடாமல் நாட்டுப் பாடல்களையும் தொகுத்திருக்கிறார். **மலை அருவி** அப்படிப்பட்ட ஒரு தொகுப்பு.

பாண்டியன் நெடுஞ்செழியன் (1956) எனக்கு பயனுள்ள புத்தகம். நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன், ஆனால் இவற்றைப் பற்றி ஒரு அட்சரமும் தெரியாது. இரண்டும் தலையாலங்கனத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை வைத்துப் பாடப்பட்டவை. நெடுநல்வாடை நக்கீரராலும் மதுரைக்காஞ்சி மாங்குடி மருதனாராலும் எழுதப்பட்டவை. முன்னது நெடுஞ்செழியனின் மனைவி குளிர்காலத்தில் போருக்கு சென்றிருக்கும் மன்னனைப் பிரிந்து வாடுவதாக எழுதப்பட்டிருக்கிறது. பின்னது அரசனின் போர் வெற்றிகளை விவரித்து ஆனால் நாட்டின் நலத்தை – விவசாயம், நீர்வளம், வணிகம் – ஆகியவற்றிலும் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்துகிறது.

பரம்புமலை வள்ளல், எழுபெரு வள்ளல்கள், குமண வள்ளல் வரலாறு, கோவூர் கிழார் போன்ற புத்தகங்கள் பள்ளி மாணவர்களைக் குறி வைத்து எழுதப்பட்டவை போலத் தெரிகின்றன. கோவூர் கிழார் புத்தகத்தை 2012-இல் சரியாக ஏழாம் வகுப்புக்கு துணைப்பாடமாகவும் வைத்திருக்கிறார்கள்.

கவிதைகளையும் சிறுகதைகளையும் முயற்சித்திருக்கிறார். **அறுந்த தந்தி, கலைஞனின் தியாகம், குமரியின் மூக்குத்தி, கோவில் மணி, மூன்று தலைமுறை, வளைச்செட்டி, கலைச்செல்வி** என்ற சிறுகதைத் தொகுப்புகள் கிடைத்தன. **ஆலமரத்து சாமியார்** என்ற எளிய, ஆனால் படிக்கக் கூடிய சிறுகதை இங்கே. அறுந்த தந்தி சுமார்; மற்ற எதுவும் குறிப்பிடும்படி இல்லை. ஆங்கிலத்தில் ஒரு சிறுகதை – Drunkard

God – இருங்க. சிறுவர் நூல்களைக் கூட விடவில்லை. **(நல்ல பிள்ளையார், நாலு பழங்கள்)**


கலைமகள் ஒரு காலத்தில் நல்ல இலக்கியத் தரம் வாய்ந்த சிறுகதைகள், நாவல்களைப் பதித்தது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். (எழுபதுகளில் அப்படி எல்லாம் இல்லை.) அதற்கு அவரது பங்களிப்பும் இருந்திருக்கும். அவர் வீடு சென்னை மந்தவெளியில் இருந்தது. சிறு வயதில் ஒரு முறை அவர் வீட்டுக்குப் போயிருக்கிறேன். நான் பார்த்த முதல் தமிழ் எழுத்தாளர் அவர்தான். அதற்கப்புறம் நான் தமிழ் எழுத்தாளர்கள் பக்கம் தலை வைத்துப் படுக்க ரொம்ப நாளாயிற்று.


கி.வா.ஜ. போன்ற பண்டிதர்கள், தமிழறிஞர்கள் தேவை. இல்லாவிட்டால் பழைய தமிழ் இலக்கியங்களைப் பற்றி யாரிடம் போய் கேட்பது? அவர் போன்றவர்களிடம் தமிழ் கற்றுக் கொண்டிருந்தால் தமிழில் கொஞ்சம் ஊக்கம் அதிகரித்திருக்கும் வியக்க வைக்கும் ஒரு விஷயம் அவர் இலக்கியங்களோடு நிறுத்திக் கொள்ளாமல் நாடோடிப் பாடல்கள் மீதும் கவனம் செலுத்தி சேகரித்திருப்பது. சில காலமாவது கலைமகளை இலக்கியப் பத்திரிகையாக நடத்தி இருக்கிறார். ஆனால் அவர் பொருட்படுத்தப்பட வேண்டிய புனைவு எழுத்தாளர் அல்லர். அதனால் ஒரு குறைவுமில்லை.

(😊) @@@@@@@@@@@@@@@@ (😊)



chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://noolaham.net/project/41/4085/4085.pdf





கலைமகள் இதழ் (1932) தமிழில் வெளிவந்துகொண்டிருக்கும் மாத இதழ். மரபான பண்பாட்டுப் பார்வையையும் தேசியநோக்கையும் முன்வைக்கும் பொருட்டு தொடங்கப்பட்டது. தொடக்க காலகட்டத்தில் புதுமைப்பித்தன் போன்றவர்களின் கதைகளையும் வெளியிட்டது. பின்னர் தன்னை முற்றிலும் குடும்ப இதழாக ஆக்கிக்கொண்டது.

வெளியீடு, வரலாறு

சென்னை லா.ஜர்னல் அச்சகத்தின் உரிமையாளராக இருந்த நாராயணசாமி ஐயர் 1932-ல் கலைமகள் இதழை தொடங்கினார். முதல் ஆசிரியராக டி.எஸ். ராமச்சந்திர ஐயர் இருந்தார். பி.ஸ்ரீ. ஆச்சார்யா, எஸ். வையாபுரிப்பிள்ளை, பெ.நா. அப்புஸ்வாமி, பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, கா.ஸ்ரீ.ஸ்ரீ மற்றும் பல அறிஞர்கள் இதன் ஆலோசனைக்குழுவில் இருந்தனர்.

1937 முதல் கி.வா. ஜகந்நாதன் இதன் ஆசிரியராக ஆனார். கீழாம்பூர் சங்கரசுப்ரமணியன் இப்போது கலைமகள் ஆசிரியர்.

'முன்னரே தமிழில் வெளிவந்து கொண்டிருந்த இலக்கிய இதழ்களில் இல்லாத பல புதிய செய்திகளைக் கொண்டதாக கலைமகள் இதழ் அமைய வேண்டும்' என்பதே ஆசிரியர் குழுவினரின் நோக்கமாக இருந்தது. 'திரிவேணி' என்னும் ஆங்கில இதழைப் போல் இவ்விதழைக் கொண்டுவர வேண்டும் என்று ஆசிரியர் குழுவினர் விரும்பினர். ஏற்கனவே புதுச்சேரியிலிருந்து 'கலைமகள்' என்ற பெயரில் ஓர் இலக்கிய இதழ் வந்து கொண்டிருந்த நிலையில் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டு கலை, இலக்கியம், பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இவ்விதழ் அமைந்தது.

உள்ளடக்கம்

1932-ல் மூன்றாவது இதழின் பின்னட்டையில் இதில் எழுதவிருப்பவர்களின் பட்டியல் உள்ளது. அக்கால அறிவியக்கத்தின் ஒரு பொதுத்தோற்றத்தை அளிப்பது அது.

- எம்.அனந்தநாராயண ஐயர்
- பி.எஸ்.ஆச்சாரியா
- டி.ஜி.ஆராவமுத ஐயங்கார்
- எஸ்.ஆழ்வார் ஐயங்கார்
- ரா.ராகவையங்கார்
- எம்.ஏகாம்பரநாத ஐயர்
- ஜி.கணபதி சாஸ்திரிகள்
- ஏ.கந்தசாமிப்பிள்ளை
- திரு.வி.கல்யாணசுந்தர முதலியார்
- ரெவெரெண்ட் கின்ஸ்பெரி
- ஆர்.வி.கிருஷ்ணையர்
- ஆர்.கிருஷ்ணமூர்த்தி (கல்கி)
- முராரி கிருஷ்ணமூர்த்தி ஐயர்
- டி.எம்.கிருஷ்ண ஸ்வாமி
- எஸ்.குமாரஸ்வாமி ரெட்டியார்
- டி.ஜி.குருஸ்வாமி ரெட்டியார்
- ஆர்.கோபால ஐயர்
- எஸ்.வி.கோபாலகிருஷ்ண ஐயர்
- வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார்

- கே.ஜி.சங்கர ஐயர்
- எம்.எஸ்.சபேச ஐயர்
- பி.பி.என்.சாஸ்திரி
- பி.ஆர்.சிதம்பர ஐயர்
- கே.என். சிவராஜ பிள்ளை
- எம்.எஸ்.சுந்தர சர்மா
- கே.சுப்ரமணிய ஐயர்
- என்.சுப்ரமணிய ஐயர்
- வெ.ப.சுப்ரமணிய முதலியார்
- எஸ்.எஸ்.சூரியநாராயண சாஸ்திரி
- ஆர்.பி.சேதுப்பிள்ளை (ரா.பி.சேதுப்பிள்ளை)
- கோ.சேஷாத்ரி ஐயர்
- என்.சேஷாத்ரி ஐயர்
- எஸ்.சோமசுந்தர தேசிகர்
- ஜி.தாதாச்சாரியார்
- எம்.பி.எஸ் துரைசாமி
- வே.துரைசாமி ஐயர்
- வி.ஆர்.துரைசாமி நாயுடு
- எஸ்.தேசிகவினாயகம் பிள்ளை
- ஒ.ப.தேசிகன்
- அ.நாகஸ்வாமி ஐயர்
- வே.நாராயண ஐயர்
- மிஸ்.பவானி ஸ்வாமிநாதன்
- பி.ஏ.பாஷ்யம் ஐயங்கார்
- ஜே.எஸ்.பொன்னையா நாயுடு
- ஏ.மகரபூஷணம் ஐயங்கார்
- எம்.மீனாம்பாள்
- பி.ஆர்.மீனாக்ஷிசுந்தர முதலியார்
- பி.ஏ.முத்துத்தாண்டவர்
- முத்தையா பாகவதர்
- என்.ஆர்.ரகுநாதாச்சாரியார்
- டி.எஸ்.எஸ்.ராகவாச்சாரியார்
- ஆர்.ராம ஐயர்
- ந.ராமசாமி ஐயர்
- என்.ராமஸ்வாமி ஐயர்

- எம்.ஆர்.ராமஸ்வாமி
- சி.கே.லக்ஷ்மி அம்மாள்
- சி.லக்ஷ்மிநாராயண ஐயர்
- இ.எஸ்.வரதராஜ ஐயர்
- சி.வீரபாகுப் பிள்ளை
- வி.விசாலாக்ஷி அம்மாள்
- கே.சி.வீரராகவ ஐயர்
- சா. வேங்கடசாமி ஐயர்
- டி.எல்.வேங்கடராம ஐயர்
- மிஸ். ஜோசப்
- பி.பி.ஸ்ரீனிவாசாச்சாரியார்
- டி.சி.ஸ்ரீனிவாட ஐயங்கார்
- பி.வி.ஸ்ரீராம ஐயர்
- ஷாந்தி ரங்கராவ்
- எஸ்.ஸத்யமூர்த்தி ஐயர்
- வே.ஸநாதன ஐயங்கார்
- கே.ஸாவித்ரி அம்மாள்
- கே.என்.ஸீதாராம ஐயர்



கலைமகள் 90 ஆண்டு நிறைவிதழ்

இலக்கிய இடம்

கலைமகள் தொடங்கப்பட்ட காலத்தில் பழைய இலக்கியமரபையும் புத்திலக்கியத்தையும் இணைக்க முயன்றது. உ.வே.சாமிநாதய்யர், தேசிக வினாயகம்பிள்ளை, டி.கே.சிதம்பரநாத முதலியார் போன்றவர்கள் இவ்விதழில் எழுதினர். மணிக்கொடி நின்று கலாமோகினி தொடங்கப்படுவதற்கு நடுவே உள்ள காலகட்டத்தில் புதுமைப்பித்தன் உள்ளிட்ட மணிக்கொடி எழுத்தாளர்கள் கலைமகள் இதழில் எழுதினர். 1935-ம் ஆண்டு கலைமகள் நடத்திய சிறுகதைப்போட்டியில் ந.பிச்சமூர்த்தி முதல்பரிசு பெற்றார். ஈழச் சிறுகதை முன்னோடியான இலங்கையர்கோன் போன்றவர்கள் கலைமகள் வழியாக அறிமுகமானார்கள்

பின்னர் கலைமகள் குடும்ப இதழாக மாற்றப்பட்டது. அதில் ஏராளமான பெண்கள் எழுதினர். அநுத்தமா, சி.ஆர்.ராஜம்மா, ஆர்.சூடாமணி, ராஜம் கிருஷ்ணன், கமலா சடகோபன், விந்தியா என பெண் எழுத்தாளர்களின் ஒரு நிரையை கலைமகள் உருவாக்கியது. இவர்களை பொதுவாகவே கலைமகள் எழுத்தாளர்கள் என்று சொல்வதுண்டு. கலைமகள் நடத்திய நாராயணசாமி ஐயர் நினைவு நாவல்போட்டி, அமரர் ராமரத்தினம் நினைவு குறுநாவல் போட்டி வழியாக தமிழில் பல முக்கியமான எழுத்தாளர்கள் அறிமுகமானார்கள். உதாரணமாக பின்னாளில் ஞானபீடப் பரிசு பெற்ற எழுத்தாளரான அகிலன் 1944-ல் கலைமகள் நாராயணசாமி ஐயர் நினைவுப்பரிசை தன் பெண் என்னும் நாவலுக்காக பெற்று அறிமுகமானார்.

இதழ்தொகுப்புகள்

கலைமகள் இதழ் தொகுதிகளை கலைஞன் பதிப்பகம் மூன்று பகுதிகளாக வெளியிட்டுள்ளது.

https://dhinasari.com/literature/functions/219222-kalaimagal-monthly-90th-year-special-issue-released.html

(😊)(😊) @@@@@ (😊)(😊)

காணொளிகள்

01] Suki Sivam speech about Ki Va Jagannathan l Sri Krishna Sweets l Kambanil Azhang Kanda Vezham
https://www.youtube.com/watch?v=96QXAMCVkoc [1:55:35]

02] கி.வா.ஜகந்நாதன் ✅ School Book + Outsource + PYQ | ki va jagannathan TNPSC
https://www.youtube.com/watch?v=uGxLyDIGYqE [28:33]

03] TNPSC | GROUP-IV 2025 | பொதுத்தமிழ்
https://www.youtube.com/watch?v=c1gf-eRmQS8 [26:04]

04] கி.வா.ஜகந்நாதன் | சிறுகதை | ஆறாத புண்
https://www.youtube.com/watch?v=gQ1tlcoR2GA [25:21]

05] YOGI RAMSURATKUMAR - Vageesa Kalanidhi Shri Ki Va Jagannathan's Garland of Verses
https://www.youtube.com/watch?v=1M7EoaLBBSc [18:56]

06] கருணையின் வேகம் , கதை சொல்கிறார் கி.வா.ஜ.
https://www.youtube.com/watch?v=imazHwZuYhk [09:56]

07] குமரியின் மூக்குத்தி கதை/Tamil historical story/கி.வா. ஜகந்நாதன் சிறுகதை/ki.va.ja/TrendyTamili
https://www.youtube.com/watch?v=IN6cqiGiShc [12:34]

(😊)(😊) @@@@@@@@@@ (😊)(😊)

காலக்கோடு

கிருஷ்ணராயபுரம் வாசுதேவ ஜகன்னாதன் (கி. வா. ஜா), தனது முதலெழுத்துக்களான கி. வா. ஜா என்றே பரவலாக அறியப்பட்டவர், ஒரு புகழ்பெற்ற தமிழ் அறிஞர், உரையாசிரியர், பத்திரிகையாளர் மற்றும் கவிஞர் ஆவார். கீழே அவரது வாழ்க்கைக்காலவரிசை மற்றும் முக்கியப் பங்களிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

கி.யின் காலவரிசை. வா. ஜா (1906–1988)

- **ஏப்ரல் 11, 1906:** தமிழ்நாட்டின் கிருஷ்ணராயபுரத்தில் பிறந்தார்.

- ***ஆரம்பகால வாழ்க்கை மற்றும் கல்வி:*** *புகழ்பெற்ற தமிழ் அறிஞரான யு.வி. சுவாமிநாத ஐயர் (தமிழ்த்தா) அவர்களின் வழிகாட்டுதலில் கல்வி பயின்றார்.*
- **1930கள்-1940கள்:** *யு.வி. சுவாமிநாத ஐயரின் படைப்புகள் உட்பட தமிழ் இலக்கியங்களை வெளியிடும் பணியைத் தொடங்கினார்.*
- **1932:**கலைமகள் *என்ற தமிழ் இலக்கிய இதழில்* உதவி ஆசிரியராகச் சேர்ந்து, பின்னர் அதன் ஆசிரியரானார்.
- **1967:**விரார் உலகம் **என்ற இலக்கிய விமர்சனத்திற்காக தமிழில்** சாகித்ய அகாடமி விருதை *வென்றார்*.
- **1967–1968:** டிவிமலை அருணகிரிநாதர் விழாவில் பங்கேற்று, ஒரு புகழ்பெற்ற பேச்சாளராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார்; காஞ்சி பரமாச்சாரியாரால் இவர் அடிக்கடி 'வாகீச கலாநிதி' என்று குறிப்பிடப்பட்டார்.
- **பணி வாழ்க்கை முழுவதும்:**
  - கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருமுருகாற்றுப்படை, அபிராமி அந்தாதி, கந்தர் கலிவெண்பா பற்றிய விளக்கங்கள் உட்பட 200க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.
  - காவியமும் ஓவியமும், கந்தர் அலங்கார சொற்பொழிவுகள், கோயில் மணி, கி.வா.ஜா பேசுகிறார்*போன்ற பிரபலமான படைப்புகளை எழுதியுள்ளார்*.
  - தனது கூர்மையான நகைச்சுவை உணர்விற்கும், *பேச்சுகளில்*பயன்படுத்தும் சிலடைகளுக்கும் பெயர் பெற்றவர்.
- **1988, நவம்பர் 4:** தமிழ் இலக்கியத்தில் ஒரு பெரும் பங்களிப்பை விட்டுச் சென்று காலமானார்.

முக்கியப் பதவிகளும் அங்கீகாரமும்:

- **வாகீச கலாநிதி:** தமிழ் மொழியில் பெற்ற புலமைக்காக காஞ்சி பரமாச்சாரியாரால் வழங்கப்பட்ட பட்டம்.
- **ஆசிரியர்:**கலைமகள் *இதழின் நீண்டகால ஆசிரியராகப் பணியாற்றினார்*.
- **விரிவுரையாளர்:** ஆழ்ந்த தமிழ் செவ்வியல் அறிவை சாமானிய வாசகர்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் புகழ்பெற்றவர்.

(😊)(😊) கிவாஜ (😊)(😊)